
நன்றி - நூலகத்திட்டம்


# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 20 நவ/டிசம்பர் 1992 விலை 5/-




# தமிழ் மக்களின் எதிர்காலத்தை சிங்களமக்கள்தீர்மானிக்க இயலாது

**- சுனந்த**

தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும். அவர்களது எதிர்காலத்தை சிங்களமக்கள் தீர்மானிக்கவியலாது. எந்த வித அச்சுறுத்தலுமின்றி தமது எதிர்காலத்தைத் தீர்மானிக்க தமிழ் மக்களுக்கு பூரண உரிமையுண்டு என்பதை ஆணித்தரமாக கூறுகிறோம் என்கிறார் ''யுத்திய'' ஆசிரியர் சுனந்த தேசப்ரிய.

தமிழ் மக்கள் ஆயுதம் ஏந்தியதால் தான் இந்த யுத்தம் உருவானது. எனவே யுத்தத்திற்கு காரணம் தமிழ்மக்களே என பேரினவாதிகளால் பரப்பப்பட்டுள்ள கருத்திற்கு மாறாக, உண்மை அதுவல்ல, சுதந்திரத்திற்கு முன்பிருந்தே தமிழ்மக்கள் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளார்கள். ஆகவே இந்த யுத்தம் ஆரம்பிப்பதற்கு சிங்கள ஆளும் கட்சிகளும், தலைமையுமே பெருமளவான பொறுப்பை ஏற்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

எமது பத்திரிகையூடாக சிங்கள வாசகர்களுக்கு தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு வகையான பிரச்சினைகளையும் வெளிப்படுத்தி வருகிறோம். எமக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமானால் எமது பத்திரிகையூடாக பிரபாகரன் சிங்கள மக்களுக்கு ஏதாவது சொல்ல விரும்பினால் அதனையும் வெளியிடத் தயாராக உள்ளோம் எனக் கூறும் சுனந்தவின் பேட்டி 5ம் பக்கத்தில் முழுமையாகத் தரப்படுகிறது.

## அயோத்தி - தகர்க்கப்பட்டது மசூதி மட்டுமா?

அயோத்தி

கி.பி 1528 இல் முஸ்லிம் பேரரசரான பாபர் ஆல் கட்டப்பட்ட மசூதி போய், இராமர் கோயில் வந்தாயிற்று.

இந்த மாபெரும் கைங்கரியத்தை செய்திருக்கின்றன; பாரதீய ஜனதா கட்சி, விஷ்வ ஹிந்து பரிஷத், ஆர்.. எஸ்.எஸ் போன்ற இந்து வெறிக் கூட்டங்கள்.

இது நடைபெற்றிருக்கிறது மதச்சார்பின்மையை ஒரு அங்கமாக அரசியல் சாசனத்திலே கொண்டுள்ள நாடான இந்தியாவில் (இந்தியா, இலங்கை போன்ற நாடுகட்கு மதச் சார்பின்மை என்பது வெறும் அரசியல் சாசனத்துடனான விடயம் மட்டும் போலும்)

கடந்த ஞாயிறன்று பாரதீய ஜனதாக் கட்சியாலும், விஷ்வ ஹிந்து பரிஷத், ஆர்.எஸ்.எஸ் போன்ற அமைப்புக்களாலும் கூட்டப்பட்ட இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட இந்து வெறியர்கள் கைகளாலும், கம்பிகளாலும், ஆமரர்களாலும் மசூதியை தாக்கி அழித்தனர். மசூதி இருந்த இடத்தில் புதிய இராமர் கோயிலையும் கட்டி முடித்துள்ளனர்.

அண்மைக் காலமாக இந்தியாவில் சர்ச்சைக்குள்ளாகியிருந்த இந்த விவகாரத்தை நியாயமான முறையில் தீர்த்து வைக்க இந்திய அரசு எந்த விதமான அக்கறையும் எடுக்கவில்லை. மறுபுறத்தே பாரதீய ஜனதாக் கட்சியாலும், விஷ்வ ஹிந்து பரிஷத், ஆர்.எஸ்.எஸ் போன்ற அமைப்புகளாலும் வளர்க்கப்பட்டு வந்த இந்து வெறியையும், முஸ்லிம் விரோதப் போக்கையும் கண்டு கொள்ளாமல் மெத்தனமாகவே இருந்து வந்துள்ளது. இந்து தர்மத்தை பேணும்படியும், இந்துவாக வாழும்படியும் தீவிர பிரச்சாரங்கள் இவ்வமைப்புகளால் மேற்கொள்ளப்பட்டு வந்தது. அதன் அடித்தளம் இந்து-இந்தி-இந்தியா என்பதாகவிருந்தது. இதனூடாக முஸ்லிம்களுக்கெதிரான உணர்வும், வன்முறையும் ஆங்காங்கே இடம் பெறவாரம்பித்தன.

........... 2

## தமிழர்களுக்கு ஏன் வீடு கொடுக்கிறீர்கள்?

இதனை எழுதிக் கொண்டிருக்கின்ற போது காலி வீதி கொள்ளுப்பிட்டியில் பஸ்களை மறித்து தமிழர் என அடையாளமிடப்படுபவர்கள் பொலிஸாரால் வானில் ஏற்றிக் கூட்டிச்செல்லப்படுகின்றனர். இன்றைய தினகரன் பத்திரிகை (03.12.92) யில் சிறு தலையங்கம் ''கொழும்பில் கைதாகிய தமிழ் இளைஞர்களை விடுவிக்கும்படி ஜனாதிபதி உத்தரவு - பிரதி மேயரின் வேண்டுகோளையடுத்து நடவடிக்கை''.

தலை நகரில் கடற்படைத் தளபதியின் படுகொலை, அதன் முன்னர் இடம் பெற்ற பொலிஸ் அத்தியட்சகர் தியோபிலஸ் படுகொலை, திம்பிரிகசாய வில் சந்தேகமான முறையில் நடமாடிய இளைஞர்கள், பார்ண்ஸ் பிளேஸில் வெடிகுண்டு வெடிக்கச் செய்து தற்கொலை செய்து கொண்ட சம்பவம் இவை தலை நகரின் பாதுகாப்பு சம்பந்தமாக மீள ஒரு கேள்வியை எழுப்பி உள்ளது. வழமை போலவே தமிழர் என அடையாளம் தெரிவோர் சந்தேகத்துக்குள்ளாகின்றார்கள். இதன் விளைவாக தமிழர்கள் பல வித இன்னல்களுக்கு உள்ளாகிறார்கள்.

விடியற்காலை 3-4 மணி தான் பொலிஸாரின் நேரம். தமிழர் வாடகைக்குக் குடியிருக்கும் வீடுகளில் புகுந்து விடுகிறார்கள். முன்னர் பொலிஸில் பதிந்த பதிவுச்சீட்டுக்கள் இருந்த போதிலும், தமிழர்களால் இக்கடும் நடவடிக்கைகளிலிருந்து தப்ப முடியவில்லை. இதன் பின்னர் பதிவு செய்வதன் அர்த்தம் கேள்விக்குள்ளாகிறது. குறிப்பாக வெளிநாடுகளுக்குச் செல்வதற்காக இலட்சக்கணக்கில் பணத்தைக் கட்டியவர்கள், தமது எதிர்காலம் பற்றி பொலிஸ் நிலையத்துள் சிந்தித்த படி இருக்கிறார்கள்.

இதன் பிறகு தமிழர்களுக்கு வீட்டினை வாடகைக்குக் கொடுப்பதற்குச் சிங்கள மக்கள் பெரிதும் அஞ்சு

......... 11

## காதிலே பூ!

'ஏதாவது ஒரு விடயம் குறித்து உனக்கு தீர்மானம் எடுக்க முடியாமல் இருந்தால், சிக்கலை இலகுவாக தீர்த்துக் கொள்ள ஒரு வழி இருக்கிறது. உனது எதிராளிகள் அவ்விடயம் குறித்து என்ன தீர்மானம் எடுக்கிறார்கள் என்று கவனி; பிறகு அதற்கு நேரெதிரான ஒரு தீர்மானத்தை எடு'

யார் சொன்னது என்பது ஞாபகம் இல்லை, ஆனால் கடந்த நாற்பதாண்டுகட்கு மேலான தமிழ் மக்களின் அரசியல் வாழ்வில் மிகச் சரியான முடிவுகளுக்கு வருவதற்கு இது நிறையவே உதவியிருக்கிறது.

இப்பொழுது கவனிப்பதற்குரியதாகிய விடயம் ஸ்ரீநிவாசன் முன்வைத்துள்ள 'தீர்வு யோசனைகள்'

ஐ.தே.க. அரசும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இந்த யோசனைகளை எந்தவிதமான மறுப்புமின்றி அப்படியே ஏற்றுக் ஏற்றுக்கொண்டு விட்டன. ஆளுங்கட்சியை சேர்ந்த அனைவரும், கொழும்புப் பத்திரிகைகளும் இந்த யோசனைகளை வானளாவப் புகழ ஆரம்பித்துள்ளார்கள்.

நிலமையைப் புரிந்து கொண்டு தயாரிக்கப்பட்ட நடைமுறைச்சாத்தியமான யோசனைகளாம் இவை.

சிங்கள பௌத்த பேரினவாதிகளால் எதிர்க்கப்பட்டு கிழித்தெறியப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தம் கூட வடக்கு கிழக்கு விரும்பினால் இணைந்து கொள்ள வழி செய்திருந்தது.

இந்தியஅரசின் நலன்களைக் காக்கவென உருவாக்கப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தம் கூட வடக்குக் கிழக்கு இணைப்பை அங்கீகரிக்க மறக்கவில்லை.

ஸ்ரீநிவாசனின் யோசனைகளோ, வடக்கு கிழக்கை நிரந்தரமாகப் பிரிப்பதற்கு வழி சொல்கின்றன.

வடக்குக் கிழக்கை பூகோளரீதியாகப் பிரிப்பதற்காகவே இலங்கையில் மாறிமாறி வந்த அரசுகள் திட்டமிட்ட குடியேற்றங்களை நடாத்தி வந்தன.

இத்திட்டமிட்ட குடியேற்றங்கள் தான் தேசிய இன இருப்புக்குறித்த அச்சத்தை தமிழ் மக்களுக்கு திரும்பத்திரும்ப ஊட்டி வந்தன.

இப்போது ஸ்ரீநினிவாசன் குடியேற்றத் திட்டங்கள் இல்லாமலேயே வடக்கு கிழக்கை பிரிக்க வழிசொல்லுகிறார்.

வடக்கு கிழக்கை பிரித்துவிட்டு அழகாக 'சமஷ்டி' என்று பெயர் வைப்பது தமிழ் மக்களுக்கு காதிலே பூ வைப்பது போன்றது என்பது ஸ்ரீநிவாசன் அவர்களுக்கு விளங்காமல் இருக்கலாம், ஆனால் பௌத்த சிங்கள பேரினவாதக் கட்சிகள் இரண்டுக்கும் உடனே புரிந்து விட்டது.

அவர்கள் உடனே அதை அங்கீகரித்து விட்டார்கள்.
பாண்டவர்கள் இறுதியாக ஐந்து வீடு கேட்டார்கள். அதுவும் மறுக்கப்படவே யுத்தம் தொடங்கியது. அப்படித் தாழ்வாரத்துக்குள் கூட ஒண்ட அனுமதி மறுக்கப்பட்டதால் தான் தமிழ் மக்கள் போராட்டத்தை தொடங்கினார்கள். ஸ்ரீநிவாசனுக்கு இது மறந்து போய் விட்டது போலும். அவர் நீண்ட காலம் லண்டனில் இருந்தது இதற்கு ஒரு காரணமாக இருக்கக் கூடும்! அரசாங்கம் மற்றும் ஸ்ரீ.ல.சு.க வுக்கும் தான்.
ஆனால் ஒவ்வொரு நாளும் உயிரைக்கொடுத்து வாழ்ந்து கொண்டிருக்கும், தமிழ் மக்களுக்கு ஒரு போதும் மறந்து விடப்போவதில்லை! தமிழ் மக்களுக்கு எது தெரியாவிட்டாலும் ஒன்று மட்டும் நிச்சயமாகத் தெரியும்.

அது தான் சிங்கள பௌத்த பேரினவாதிகளின் அபிப்பிராயங்கள் குறித்து, நாம் மேலே குறிப்பிட்ட கோட்பாட்டைப் பயன்படுத்த வேண்டும் என்பது!

நன்றி - நூலகத்திட்டம்



# மெல்லத் தமிழினி

## முதலில் பாதுகாப்பு; பிறகு பரீட்சை

**யா**ழ்ப்பாணத்தில் இருந்து பரீட்சை எழுத என்று ஒருவர் வந்திருந்தார்.
நீண்ட கால இடைவெளிக்குப் பின்-கிட்டத்தட்ட எட்டு ஆண்டுகளுக்குப் பின் அவர் கொழும்புக்கு வந்ததாகச் சொன்னார்.
கொழும்பு வந்து சேர இரவு ஏழுமணியாகி விட்டது.
தங்கி நிற்பதாக முடிவு செய்து கொண்டு வந்த தனது நண்பரது வீட்டைத் தேடிப்பிடிக்க இரவு எட்டுமணிக்கு மேலாகி விட்டது.
நீண்ட தூரப் பயணம்; உடம்பு அலுப்பு ஏற்படுத்திய அசதி காரணமாக மறுநாள் நடக்க விருந்த பரீட்சைக்குப் படித்த பாடங்களை ஒருதடவை தட்டிப் பார்ப்பதற்கு கூட முடியாதளவுக்கு தூக்கம் கண்ணை முட்டிக் கொண்டது.
யாழ்ப்பாணத்துப் புதினங்களை கேட்பதற்கு குழுமிய நண்பரின் வீட்டார்களுடன் கூட அதிகம் பேச முடியவில்லை.
தூங்கிவிட்டார்.
அதிகாலை நாலுமணி இருக்கும்.
பதிவு செய்யாமல் வீட்டில் இருந்தவர் என்ற பெயரில் திடீரென வீட்டை முற்றுகையிட்ட பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். பரீட்சைக்காக வந்ததையும் பொலிஸில் பதிவு செய்யக்கூட தனக்கு அவகாசம் இருக்கவில்லை என்பதையும் பலமுறை எடுத்துச் சொல்லிப் பார்த்தார் அவர். தான் இந்தப் பரீட்சைக்காக மட்டுமே இங்கு வந்ததாக திரும்பத் திரும்பக் கூறினார்.
ஆனால் பொலிஸாரின் காதுகளில் அது விழுந்ததாகத் தெரியவில்லை ஆங்கிலம் தெரிந்த ஒரு அதிகாரியிடம் ஆங்கிலத்தில் முறையிட்டார். ''முதலில் நாட்டின் பாதுகாப்பு, பிறகுதான் பரீட்சை'' என்று பதில் வந்தது. வழமை போல N.I.B றிப்போட்டுக்குப் பிறகு அவர் விடுவிக்கப்பட்டார்.
மனமுடைந்து போன அவர் மறுநாளே யாழ்ப்பாணம் திரும்பிப் போனார். போகமுன் அவர் சொன்ன வார்த்தைகள் எனக்கு ஞாபகத்திற்கு வருகின்றன.
'இதைவிட, யாழ்ப்பாணம் எனக்கு எவ்வளவோ நிம்மதி தருகிற இடமாக இருக்கிறது'.
உண்மைதான்! கொழும்பில், தமிழனாகப் பிறந்த ஒரே பாவத்திற்காக ஒவ்வொரு கணமும் மனோரீதியாகச் சித்திரவதைப்படுவது இங்கு வந்து சேர்கிற ஒவ்வொரு தமிழனதும் நிலமையாக இருக்கிறது. ஆனால், யாழ்ப்பாணத்தில் புலிகளின் அதிகாரத்தின் கீழ், நாம் ஒரு போதும் இந்தக் காரணத்திற்காக கவலைப்பட வேண்டியதில்லை.
'இரண்டாந்தரப் பிரஜை' என்பதையிட்டு வெட்கப்படத் தெரியாத தமிழர்களுக்கு இது சிலவேளை 'நியாயமாகப்' படலாம்.
ஆனால்...

## தீர்மானிப்பது யார் ?

**ஸ்ரீ**நிவாசன் என்றொரு மனிதர்.
அகதிகளாக மட்டும் மூன்றுலட்சத்துக்கு மேற்பட்டவர்களை கொண்டிருக்கும் யாழ்மாவட்டத்தில் 5919 வாக்குகளைப் பெற்று பா.உ.வானவர். தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற பெயரில் பதியப்பட்ட பேர்களில் ஏழாவதாக வந்ததால் இவருக்கு இந்த வாய்ப்புக் கிடைத்தது. ஈ.என்.டீ.எல்.எப் பிலிருந்து எப்போதோ வெளியேற்றப்பட்ட பின்னும், அவசரகாலச் சட்டத்தை நடைமுறையில் வைத்திருக்க ஆதரவு தருகின்ற இவர் எம்பியாக இருந்து வருகிறார்.
அத்துலத் முதலி கோஷ்டியினருக்கு பதவி பறிபோனபோதும் இவருக்கு அது இருக்கிறது.
இவர் ஒரு 'ஆலோசனை'யுடன் பெரும்பான்மைக் கட்சிகளுடன் பேசி வருகிறார். பாம்பும் சாகாமல் தடிக்கும் நோகாமல் பாம்பை அடிக்கிற வித்தை பற்றி விளங்கிக் கொள்ள முடியாதவர்கள் இவரது ஆலோசனைகளைப் படித்தால் அதை விளங்கிக் கொள்ளலாம். முஸ்லிம் கட்சிகள், அரசு, தமிழ் கட்சிகள் அனைவரையும் திருப்திப்படுத்தக் கூடிய இவரது யோசனைகளை எல்லா ஆங்கிலப் பத்திரிகைகளும் புகழ்ந்து எழுதுகின்றன.
அதன் முதலாவது அம்சம் வடக்கு கிழக்கு இணைப்பை ரத்துச் செய்வதாகும்.
தெரிவுக்குழு முன் ஆலோசனைகளை யாரும் முன்வைக்கலாம்
யோசனைகளை யார் வேண்டுமானாலும் விமரிசிக்கலாம்; ஆதரிக்கலாம்.
முடிவு செய்யப் போவது எல்லோரும் நினைப்பது போல; அல்லது நினைப்பதாகப் பாசாங்கு செய்வது போல தெரிவுக்குழுவோ, புலிகளோ அல்ல.
சிங்கள பௌத்தம்.
அதன் பலத்தில் வளர்ந்து நிற்கும் அரசு.

## யாரைத்தான் நம்புவதோ ?

**டெ**ன்சில் கொப்பேகடுவவையும் சகாக்களையும் சாகடித்த நிலக்கண்ணி வெடி தற்செயலானது என்று அரசு சொல்லி வருகிறது.
இச்சம்பவம் நடந்த மறுநாளே, தாங்கள் தான் இதைச் செய்தோம் என்று புலிகள் அறிக்கை விட்டிருந்த போதும், அரசு இதை மறுத்து விட்டது.
அரசுக்குள்ளேயே, குறிப்பாக படையினருக்குள்ளேயே ஒரு பிரிவு ஏதாவது இப்படி ஒரு நாசகார வேலையைச் செய்திருக்கலாம் என்று ஒரு புரளியும் இங்கு அடிபட்டது.
இப்போது புலிகள் தாம் நிலக்கண்ணியை கொண்டு போய் வைத்ததையும் வெடிக்கச் செய்ததையும் படமெடுத்த ஒலிப்பதிவு நாடாக்களை வெளியிட்டிருக்கிறார்களாம்.
யாரைத்தான் நம்புவதோ ?

◆ ◆ ◆ ◆ ◆

## ஸ்ரீமாவோவின்

லிம்களின் தேவைகளைக் கவனிக்கும்.

மற்றைய இடங்களில் பொலிஸ் இனவிகிதாசாரப்படி நிரப்பப்படும். அதே வேளை மாகாணத்தின் பொலிஸ்படைத்தலைவராக ஒரு பொலிஸ் மா அதிபர் இருப்பார். இவருக்கு டி.ஐ.ஜி, எஸ்.எஸ்.பி, எஸ்.பி, ஏ.எஸ்.பி ஆகியோர் உதவுவர். முஸ்லிம்களின் பாதுகாப்பு கருதி, அவர்களின் பிரதேச் சபையில் ஒரு முஸ்லீம் டி.ஐ.ஜி இருப்பார்.

தேசியளவில், தேசிய பொலிஸ் படை தேசிய இனவிகிதாசாரப்படி அமையும். இராணுவத்திலும் அதே நடைமுறை இருக்கவேண்டுமென்பதுடன் தொண்டமான் ஆலோசனைகளில் புலிகளை இராணுவத்துடன் இணைப்பது தொடர்பான வடிவங்களையும் பிரேரிக்கிறார். வடக்குக் கிழக்கில் சிங்கள மக்கள் அதிகமாக உள்ள பகுதிகளைப் பொறுத்து இன விகிதாசார ரீதியான ஒரு ஒழுங்கு இருக்கும் அதே நேரம், ஒரு சிங்கள டி.ஐ.ஜியும் நியமிக்கப்படுவார்.

தொண்டமானுடைய யோசனைகள், சட்டம், ஒழுங்கு தொடர்பாக நிறைய விடயங்களை விரிவாக முன்வைக்கின்றன. ஐ.ம.கூ இவற்றைப் பற்றி தெளிவாக எதுவும் தெரிவிக்காத போதும் இருவரது நோக்கங்களும் அடிப்படையில் ஒரேமாதிரியானவையே.

பொருளாதார சுயாதீனம் இன்னொரு முக்கியமான அம்சமாகும். ஐ.ம.கூட்டு மத்திய அரசின் அனுமதியுடன் நிதியைப் பெற்றுக்கொள்ளும் அதிகாரம் பிராந்தியங்களுக்கு தேவை என்கின்றன. ஒப்பீட்டளவில் தொண்டமானுடையவை மிகவும் விபரமாக இவற்றை தெரிவிக்கின்றன.

தொண்டமானது யோசனைகள் மாகாணசபை அரசுக்கு மாகாண பொருளாதார திட்டங்களை வகுக்க ஒரு நிரந்தர திட்டமிடல் அமைப்பு தேவை என்கின்றன. இது மாகாண சபை அமைச்சர்களால் நியமிக்கப்படும். நிதி வளங்களும், மத்திய அரசால் வழங்கப்படும் நிதி வழங்கல்களும் மாகாண அரசுக்கு அரசியற் சட்டத்தால் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும். இந்த நிதியின் அளவு ஆண்டுக்கான தேசிய உற்பத்தியின் வீதாசாரப்படி கணிக்கப்பட வேண்டும்.

மாகாண அரசு வெளிநாட்டுப் பொருளாதார உதவிபெற அனுமதிக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கின்றன. தொண்டமானின் யோசனைகள் மாகாண உள்ளக நிதி மாகாண அரசால் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்றும், அதன் எல்லா நிதிகளும் ஒரே நிதிக்கணக்குக்குப் போக வேண்டுமென்றும் அது பிரேரிக்கிறது. வடக்கு கிழக்குக்கு நிதி வழங்கும் அதே நடைமுறை பிற மாகாணங்களுக்கும் மத்திய அரசால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

ஆக மேலே நாம் ஐ.ம.கூட்டினதும் தொண்டமானதும் ஆலோசனைகளை ஒப்பிடுகையில், தமிழ் சிறுபான்மையினரைத் திருப்திப்படுத்தவும் ஐக்கியப்பட்ட இலங்கையினுள் அவர்களை சமாதானமாக வாழவைக்கவும் என இவர்களிடையே உள்ள கருத்துகளில் எத்தகைய கருத்து வேறுபாடும் பாரியளவில் இல்லை எனத்தெரிகிறது.

ஆயினும், சில வேறுபாடுகள் இருக்கவே செய்கின்றன. தொண்டமான் வடக்கு கிழக்கு மாகாணத்துள்ளேயே முஸ்லிம்களுக்கு பாதுகாப்பளிக்கும் அமைப்பு முறையைப் பிரேரிக்கறார். ஆனால் ஐ.ம. கூட்டு முஸ்லிம்களையும் சிங்களவர்களையும் வெளியே வைத்து நடைமுறைப்படுத்த விரும்புகிறது. எப்படியோ, சமாதானத்தை நிலைநாட்டவும், தீவின் ஐக்கியத்தைப் பேணவும், எல்லாச் சமூகங்களுக்கு இடையேயும் சமத்துவத்தை காணவும் இருவரும் ஒத்துப் போகின்றனர். இத்தகைய உடன்பாடுகளுக்கும் விருப்பங்களுக்கும் மத்தியில் ஐ.ம.கூட்டின் முக்கிய கட்சியான ஸ்ரீ.ல.சு.கட்சி அண்மையில் தொண்டமானின் யோசனைகளைப் பலமாகத் தாக்கியிருப்பது மிகவும் ஆச்சரியத்துக்குரிய ஒன்றாக உள்ளது. இது ஸ்ரீ.ல.சு.கட்சி தன்னை சிங்கள, பௌத்த பேரினவாத உணர்வுகளுக்கு ஈடு கொடுத்து மறுசீரமைத்துக் கொள்ள அல்லது இந்திய எதிர்ப்பு உணர்வுகளைத் தட்டிவிட்டு அந்த அடித்தளத்தில் ஏறி நின்று தன்னைக் காத்துக் கொள்ள விரும்புகிறதாலாக இருக்கலாம். ஸ்ரீ.ல.சு கட்சியின் கடந்த கால வரலாற்றை கவனிக்கும்போது, அதற்கு இது ஒரு நியாயமான புதிய உதயமாக அமையக் கூடும்.

மறுபுறத்தில் ஸ்ரீ.ல.சு.கட்சி எப்போதுமே ஒரு அரசியல் சந்தர்ப்பவாதக் கட்சியாக இருந்து வந்துள்ளது. ஐ.ம.கூட்டின் இந்த யோசனைகள் ஸ்ரீ.ல.சு.கட்சியின் தலைவி ஜனாதிபதித் தேர்தலுக்கு நிற்க ஆயத்தமான போது தமிழ்ச்சிறுபான்மையினரின் வாக்குகள் அவசியமாக இருந்தபோது தெரிவிக்கப்பட்டவை. அதில் தோல்வி கண்ட பின் தொண்டமான் எதிர்ப்பு, தமிழ் எதிர்ப்பு போக்குகட்கு எப்போதுமே தயாராக உள்ள சிங்கள பேரினவாத அலையில் மிதக்க ஸ்ரீ.ல.சு.க தயாராகியுள்ளது போலும். எப்படியோ, ஸ்ரீ.ல.சு.கட்சியில் இரட்டைச் சிந்தனையும் இரட்டைப் போக்கும் நிலவியதைப் புரிந்து கொள்ளுமளவுக்கு சிங்கள வாக்காளர்கள் புத்திசாலித் தனமுள்ளவர்கள் என்பது மட்டும் உண்மையாகும்.

இவ்விதழில் வெளியாகும்
எனக் குறிப்பிட்டிருந்த கட்டுரைகள்
தவிர்க்கமுடியாத காரணங்களால்
வெளியாகவில்லை.
அடுத்த இதழில் வெளியாகும்.
வாசகர்களின் சிரமத்திற்கு வருந்துகிறோம்
ஆ-ர்

## அயோத்தி

அரசு அக்கறை கொள்ளவில்லை இறுதியாக மசூதியை இடித்து இராமர் கோவில் கட்டுவதற்கான திகதியையும் இந்து வெறியர்கள் நிர்ணயித்தார்கள். அதற்காக இந்தியா வெங்கிலுமிருந்து அயோத்தியில் இந்துக்களை வந்து கூடும்படியும் கோரிக்கை விட்டார்கள். இதையடுத்து லட்சக் கணக்கில் இந்துக்கள் அயோத்தியை முந்துகையிட்டனர் அப்போதும் காங்கிரஸ் அரசு வாளாவிருந்தது.

இப்போது மசூதி இடிக்கப்பட்டு இராமர் கோயிலும் கட்டப்பட்ட பிற்பாடு பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் அத்வானியையும், மற்றும் முரளி மனோகர் ஜோஷி, விஸ்வ ஹிந்து பரிஷத் தலைவர் அசோக் சிங்லால் ஐயும் கைது செய்திருக்கிறது இந்திய அரசு.

இந்தக் கைதுகள் எதையும் கொண்டு வரப்போவதில்லை. இவை வெறும் கண் துடைப்புகள் மட்டுமே 'புத்தனார் தலை தத்தெனத் தத்திய' இந்து மதவெறியிடம் வேறெதையும் எதிர்பார்க்க முடியாது. இந்து வெறி மசூதியைத் தகர்த்திருக்கிறது.

தகர்க்கப்பட்டது வெறும் மசூதி மட்டமல்ல, இந்து-முஸ்லிம் ஒருமைப்பாடும், மத சகிப்புத் தன்மைக் கோட்பாடும் தான்.

தகர்த்த மசூதியை யாராவது கட்டி முடித்து விடக் கூடும். முஸ்லிம்களின் மனங்களில் படர்ந்த கசப்பிற்கும், சிதைந்த ஒருமைப்பாட்டிற்கும் யார் என்ன செய்யப்போகிறார்கள்?



*சரிநிகர் மாதம் ஒரு முறை இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் சார்பில் (MIRJE) வெளியிடபபடும் இதழாகும். கருத்துச் சுதந்திரமும், பத்திரிகை சுதந்திரமும் பேணப்படுவதற்காகவும் இனத்துவ சமத்துவத்திற்காகவும் சரிநிகர் பாடுபடும். சரிநிகரில் வெளியாகும் எல்லாக் கருத்துக்களும் ஆசிரியருடையதோ அல்லது இனங்களுக்கிடையே நீதிக்கும் சமதததுவத்துக்குமான இயக்கத்தினதோ கருத்துக்களாக அமைய வேண்டுமென்ற கட்டாயமில்லை. பத்திரிகா நாகரிகத்தையும் தர்மத்தையும் பேணியமைந்த எவ்வகையான மாற்றுக் கருத்துக்களையும் சரிநிகர் பிரசுரிக்கும்.*

*எல்லாத் தொடர்புகளுக்கும்;*

*ஆசிரியர்*
*'சரிநிகர்'*
*6, அலோசாலை,*
*கொழும்பு - 3.*

நன்றி - நூலகத்திட்டம்



# உயனைப் பனங்கூடலும் பினாக்கைக் குளமும்

**21**.08.92 அன்று 'பூமிய திர்ச்சி' எனும் இராணுவ நடவடிக்கை அளவெட்டிப் பகுதியை இராணுவ மயப்படுத்தியது. தற்போது யாழ்ப்பாணத்தின் பெரும் பகுதியான கரையோரம் இராணுவ கட்டுப்பாட்டிற்குள் வந்து விட்டது. அதாவது அகதிகளின் தொகை அதிகரித்து விட்டது.

அன்று அதிகாலையில் அளவெட்டியின் வயல்களுக்குள் இராணுவம் புகுந்தது. இதனைப் புலிகள் அறிந்திருக்கவில்லை எனச் சொல்லப்படுகிறது. காலை ஆறு மணியளவில் பொம்மர்கள் வந்தன. பொம்மர்கள் குண்டுகளை ஏவிய பின்னர் சரமாரியான துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களுடன் அளவெட்டி இராணுவ ஆக்கிரமிப்பிற்குட்பட்டது. மக்கள் சிதறி ஓடத் தொடங்கினர். சிலர் நித்திரைப் பாயிலிருந்து இராணுவத்தால் வெளியேற்றப்பட்டனர். எப்பொருளும் எடுப்பதற்கு இராணுவம் அனுமதிக்கவில்லை. இலக்கற்ற துப்பாக்கி சூட்டினால் பலர் கொல்லப்பட்டும், படுகாயத்திற்கும் உட்பட்டனர். ஓடியவர்கள் போக எஞ்சியவர்கள் இளவாலை கன்னியர் மடத்துக்கு வலிந்து அனுப்பப்பட்டனர். பின்னர் கொள்ளையடித்தல் சுலபமானது.

சிதறி ஓடிய குடும்பங்களின் அங்கத்தினர் யார், யார் இறந்தனர், யார் அகதி முகாமில் இருக்கின்றனர், யார் தப்பிப் பிழைத்தனர் என்பது பற்றி ஒன்றும் தெரியாத நிலை. இன்னமும் கூட இறந்தவர்களின் முழு விபரமும் அறிய முடியவில்லை.

ஆக்கிரமிக்கப்பட்ட பின்னர் இராணுவமுகாம்கள் அமைக்கப்பட்டன. முகாம் அமைப்பதற்கும், அதனைச் சுற்றிப் பாதுகாப்பு அரண் அமைப்பதற்கும், பாதைகள் அமைப்பதற்கும் கண்ணுக்கெட்டிய தூரம் வரைக்கும் யாவும் தெளிவாகத் தெரிவதற்குமாக பல வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டன.



மாதவன்

வலிமை வாய்ந்த பனை மரங்கள் வேரொடு சாய்க்கப்பட்டன. இதன் போது அளவெட்டியும், அதனைச் சுற்றியுள்ள அம்பனை வயல் வெளியும், உயனைப் பனங்கூடலும், பினாக்கை குளமும் சமவெளியாகக் காட்சி தருகிறது.

இங்கு மிகப்பெரிய துயரம் என்னவெனில், அளவெட்டிப் பக்கம் இராணுவம் வருமென்பதை ஒருவரும் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. இராணுவ விஸ்தரிப்பிற்குரியதோ கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமோ அல்ல. ஏற்கெனவே இராணுவ எல்லை வகுக்கப்பட்ட இடங்களான பலாலி, கட்டுவன், குரும்பசிட்டி, காங்கேசன்துறை, மாவிட்டபுரம், கீரிமலை, தெல்லிப்பழை போன்ற இடங்களிலிருந்து அகதிகளானோர் அளவெட்டிக்குதான் இடம் பெயர்ந்தனர். அளவெட்டி, தான் தாங்கும் சக்திக்கும் மேலாக ஏனைய கிராம மக்களைத் தாங்கி வைத்திருந்தது. இருந்தோரும், வந்தோரும் இராணுவ வரவு பற்றி எதிர்பார்த்திருக்கவில்லை. இராணுவ முகாமின் அயல் கிராமங்களை சேர்ந்தவர்கள் சின்னப் பார்சல்கள் வைத்திருப்பதுண்டு. நகைகள், முக்கியமான ஆவணங்கள், மாற்றுடுப்புகள், மிகப் பெறுமதியான சிறு பொருட்கள், பணம் ஆகியன இப்பார்சலில் உள்ளன. இத்தகைய பார்சலை இக்கிராம மக்கள் ஆயத்தப்படுத்தி வைத்திருக்கவில்லை. யாவற்றையும் துறந்து விட்டு ஓடினார்கள். மீண்டும் உள்ளே செல்வதற்கு இராணுவம் அனுமதிக்கவில்லை. முக்கியமாக புலிகளுக்குப் பவுண் கட்டின றிசீற்றும் எடுக்க முடியாததனால், அவசர தேவைக்கு மீண்டும் இரண்டு பவுண் கட்ட வேண்டிய தேவை உண்டு.

புலிகளுடனான யுத்தம், அழிக்கப்படுவது புலிகள் மாத்திரமே என்பது அரசாங்கத்தின் அறிக்கை. இங்கு புலிகள் எதிர்த்து தாக்குதல் மேற்கொள்ளவில்லை. ஆயினும் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி, அளவெட்டி சீனன் கலட்டிப் பாடசாலைகள் சேதமாக்கப்பட்டன. அம்மன் கோயில், பிள்ளையார் கோயில் சேதமடைந்தன. மக்கள் இறந்தனர். வீடுகள் அழிந்தன. அகதிகளாக மல்லாகத்திலும், மாகியப்பிட்டியிலும், சுன்னாகத்திலும் வசிக்கிற அளவெட்டி மக்களுக்கு தங்கள் வீடுகள் தகர்ந்து நொருங்கும் சத்தம் அடிக்கடி கேட்கின்றது.

இது நடந்து ஒரு வாரத்தின் பின்னர் கொக்குவிலில் நடைபெற்ற புலிகளின் பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய பழம் பெரும் உறுப்பினரான தேவர் கூறினார்; அளவெட்டியில் எங்களுக்கு ஆதரவு இல்லை. ஒருவரும் இயக்கத்தில் சேர்வதுமில்லை. இவ்வாறான ஊர்களை நாங்கள் இப்படித்தான் அனாதரவாகக் கை விடுவோம் என்றார்.

# அதைச் செய்ய அரசுக்கு உரிமை கிடையாது!

பா.கந்தசாமி





**ஜ**னநாயக வழிக்கு திரும்பியவர்களுள் சிலர் தென்னிலங்கை இடதுசாரிக் கட்சிகள் மற்றும் ஜனநாயக முற்போக்கு சக்திகள் முன் வைக்கின்ற இன்றைய முக்கியமான முற்போக்கு கோரிக்கை 'யுத்தத்தை நிறுத்து' என்பதாகும்.

ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு கூட யுத்தத்தில் நம்பிக்கை கிடையாது என்றும், அரசியல் தீர்வுதான் நிரந்தரத் தீர்வாக இருக்கமுடியம் என்று அவர் கருதுவதாகவும் சொல்லப்பட்டு வருகிறது. ஆயினும் இந்த அரசியல் தீர்வு வெறும் வாயை மெல்வதற்கு அவல் போட்ட மாதிரி ஒன்றுதான். அதற்கு மேல் அதற்கு அர்த்தப்பாடு எதுவும் இருப்பதாக தெரியவில்லை. யுத்தத்தை நிறுத்த கோருகிறவர்களின் நியாயமான மனவிருப்பத்தை யாரும் குறைகாண வேண்டியதில்லை என்ற போதும் யுத்தத்தை நிறுத்துமாறு கோருகின்ற எல்லோரும் ஒரே நோக்கில் அதைக் கோருவதாக குறிப்பிட்டுச் சொல்லமுடியாது.

யுத்தம் இன்று தொடர்வதற்கான காரணம் புலிகளே என்றும், புலிகள் தான் இந்த யுத்தத்தை தொடக்கி வைத்தார்கள் எனவே அவர்களே யுத்தத்தை கைவிட வேண்டும் என்றும், அரசாங்கத்தை கூட சமாதான வழிமுறைக்கு கொண்டு வந்து விடலாம், ஆனால் புலிகளை வழிக்கு கொண்டு வருவதுதான் சிக்கல் என்றும், யுத்தத்தை இருசாராரும் நிறுத்த வேண்டும் என்றும் பலவிதமான அபிப்பிராயங்கள் நிலவுகின்றன.

1991இல், புலிகளால் தொடக்கப்பட்ட யுத்தம், அவர்கள் ஆயுதத்தைப் போட்டு சரணடையும் வரை அல்லது அவர்கள் முற்றாக அழிக்கப்படும் வரை நிறுத்தப்பட முடியாதது என்பது அரசின் இன்றைய நிலைப்பாடு. இந்த யுத்தம், தமிழ் மக்களுக்கு எதிராக அல்ல, புலிகளுக்கு எதிராகவே நடாத்தப்படுகிறது என்று திரும்பத் திரும்ப அரசு கூறிவருகிறது - சலிப்பூட்டுமளவிற்கு திரும்ப திரும்ப.

ஆனால் உண்மையில் நடப்பது என்ன?

கடைசியாக நடைபெற்ற பூமிய திர்ச்சி நடவடிக்கைகளின்போது, தெல்லிப்பழை, சிறுவிளான், இளவாலை, அளவெட்டிப் பகுதி முற்றாக இராணுவத்தின் கைக்குள் வந்தது என்னவோ உண்மைதான். ஆனால் இதனால் எத்தனை புலிகள் பாதிக்கப்பட்டார்கள்? 30000க்கும் மேற்பட்ட மக்கள் அகதிகளாக்கப்பட்டு சுன்னாகம், மானிப்பாய் பகுதிகளை நோக்கி விரட்டப்பட்டனர். நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகள் தகர்க்கப்பட்டன. வீடுகளிலிருந்த உடமைகள் சூறையாடப்பட்டன. அளவெட்டி சீனன் கலட்டி மகாவித்தியாலயம் முற்றாகத் தரைமட்டமாக்கப்பட்டது. அப்பாவிப் பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டார்கள். இராணுவத்தின் சுற்றி வளைப்பின்போது, துப்பாக்கிகளையும், வீரத்தையும் ஒழுங்கைக்குள் போட்டு விட்டு ஓடிய புலிகள் உட்பட அவர்கள் யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. அல்லது ஏற்பட்ட பாதிப்பு குறிப்பிடத்தக்களவு கணிசமானதல்ல. பதிலாக பாதிக்கப்பட்டவர்கள் திரும்பவும் பொதுமக்கள் தான்.

ஆனால் அரசு சொல்கிறது இந்த யுத்தம் புலிகளுக்கு எதிரானது என்று. புலிகளின் தாக்குதல் தந்திரோபாயம் காரணமாகவே பொது மக்கள் பெருமளவில் பாதிக்கப்படுகிறார்கள் என்கிறார்கள். புலிகளின் தந்திரோபாயத்திற்கு பொதுமக்கள் என்ன வகையில் பொறுப்பேற்க வேணுமென அரசு எதிர்பார்க்கிறதோ தெரியவில்லை. இப்போது குடாநாட்டிற்கான போக்கு வரத்துக்கான பாதையை முற்றாக தடை செய்துள்ளமை, கடல்பிரதேசம் யுத்தப்பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ளமை என்பனவும், புலிகள் அனுமதிக்காத ஆனையிறவு பாதையை பயன்படுத்துமாறு வலியுறுத்துவதும் அரசு யாருக்கெதிராக யுத்தத்தை நடத்துகிறது என்பதற்கு நல்ல எடுத்து காட்டுகளாகும். புலிகளுக்கு எதிராகத் தான் யுத்தம் நடக்கிறது என்றால், குடாநாட்டுக்கு எடுத்து செல்லப்படும் பொருட்களிற்கு கட்டுப்பாடு நியாயமற்ற முறையில் விதிக்கப்படுவது ஏன்? தீப்பெட்டி எடுத்துச் செல்ல அரசு தடை விதிப்பது புலிகள் இன்னமும் தீப்பெட்டி மருந்தை சுரண்டித்தான் வெடிமருந்து தயாரிக்கிறார்கள் என்று அரசு நம்பிக் கொண்டிருக்கிறதால் தானா? இந்த யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிரானது என்று சொல்வதை மறுத்து, அப்படி ஒரு தேவை அரசுக்கு இருக்கிறதா என்று சிலர் கேட்கிறார்கள். இலங்கை அரசு புனித ஜனநாயக அரசாகவும், இனசமத்துவத்தை (பெயர்பலகைகளிலும், அரச பத்திரங்களிலும்!) பேணும் ஒன்றாகவும் கருதப்படுமாறு பத்திரிகைகளும், வானொலியும் மக்களின் காதுகளில் ஓதிக் கொண்டிருக்கையில், இத்தகைய கேள்வி எழுவது வியப்பல்ல. ஆனால் புலிகளுக்கும் அரசுக்குமிடையில் 91 இல் யுத்தம் வெடிப்பதற்கும் பத்து ஆண்டுகளுக்கு முன் ஆயுதப்போராட்டக் குழுக்கள் தோற்றம் பெற்றதற்கும் இடையில் தமிழ் மக்களின் அரசியல் உரிமையில் என்ன வேறுபாடு ஏற்பட்டிருக்கிறது என்று பார்த்தால், இந்தக் கேள்விக்கான பதில் எமக்குப் புரிந்துவிடும்.

81இலும் சரி, இன்று 92 இலும் சரி, தமிழ்மக்களின் அரசியல் உரிமையை, இன அடையாளத்தை இல்லாதொழிப்பதில் சற்றும் மனந்தளராது ஈடுபட்டிருக்கும் இலங்கை அரசு தமிழ் மக்களுக்கும் அரசுக்குமிடையில் யுத்தம் வெடிப்பதற்கான ஒரு சூழலை எப்போதுமே பேணி வருகிறது. புலிகளுக்கும் அரசுக்குமிடையில் வெடித்த யுத்தத்திற்கு மட்டக்களப்பு சம்பவம் ஒரு நிமித்த காரணமே ஒழிய, அதுவே அடிப்படை அல்ல. புலிகள் என்ற தனிப்பட்ட குழுவை சம

..............>11

நன்றி - நூலகத்திட்டம்



# இன்றைய யாழ்ப்பாணத்தில் கலை-3

சென்ற இதழ் கட்டுரையில் தனிமனிதர்கள் பற்றிய விமர்சனம் முறையானதல்ல எனச் சிலர் குறை கூறினர். இப்பந்தியில் ஒரு விடயம் தெளிவு படுத்தப்பட வேண்டும். யேசுராசாவோ மு.பொன்னம்பலமோ, முருகையனோ தனிமனிதர்கள் அல்ல. அவர்களின் தனிப்பட்ட சொந்த வாழ்க்கை பற்றி ஆராய்வது எனது அக்கறையுமல்ல. ஆனால் இவர்கள் முன்னர் என்ன சொன்னார்கள், என்னசெய்தார்கள், இப்பொழுது என்ன செய்கிறார்கள் என்பது கவனத்தில் எடுக்கப் பட வேண்டியதாயிருப்பது அவர்களது கலை இலக்கிய தளத்திலான இயங்குதல் காரணமாகவே. அவர்கள் முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறார்கள் என்பதைத் தெரிவிப்பதே எனது நோக்கமாக இருந்தது. இவை ஒரு புறமிருக்க, இன்னொரு விடயம் தான் இங்கு மிகமுக்கியமானது. இப்போதைய புலிகளின் அராஜகத்தை ஆதரிக்கிறார்கள். (அல்லது நடிக்கிறார்கள்) புலிகளின் தவறான நோக்கினால் வழி நடத்தப்பட்டு ஆயிரக்களின் நிதர்சனம் பொறுப்பாளரான பரதன் அவர்களால் குறுந்திரைப்படம் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்தது. **'இனி ஒரு விதி'** எனும் இத்திரைப்படம் முப்பது நிமிடங்களாலானது. எல்லைப் புறக்கிராமம் ஒன்றில், தாய், தகப்பன், மகள், மகன் எனும் சிறிய குடும்பம். கிராமத்தினுள்ளே இராணுவம் நுழைகிறது. இவர்கள் காட்டுக்குள் ஓடுகிறார்கள். தாய், தகப்பன் சுடப்பட்டிறக்க, மகனும், மகளும் நிறையச் சிந்தித்ததன் விளைவாக இயக்கத்தில் சேர்க்கிறார்கள். அப்பட்டமான பிரச்சாரம். படப்பிடிப்பு நேர்த்தியாக அமைந்தது. பல சந்தர்ப்பங்களில் கலாபூர்வ முயற்சிகள் தென்பட்டன. இத்திரைப்படம் வசனத்தை நம்பியிருக்கவில்லை. வசதிக் குறைவு காரணமாக படத்தொகுப்பு செப்பனிடப்படவில்லை. ஆயினும் நல்ல சினிமாவுக்கான முயற்சி என்பதனை வாய் கூசாமல் கூறலாம். எளிமையான மிகச் சராசரியான திரைப்படப் பிரதி என்பதனால் பெரிதளவிலான தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.

பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. அவை தம்பாட்டுக்குச் சரிவர கடமைகளைச் செய்கின்றன.

இதே காலங்களில் கிளிநொச்சியில் கல்வித்திணை களத்தின் அனுசரணையுடன் அ.ரவி, விந்தன் போன்றோர் **'இப்போதைக்கேது வழி', 'எத்தனை நாளைகென்று', 'இனிப்பட முடியாது', 'நிஜமான கதை கேளு', 'ஞாயிறு போற்றுதும்'** எனும் நாடகங்களை கிளிநொச்சியின் கிராமங்களுக்கு கொண்டு சென்றனர். நவீன நாடகம் பற்றிய விழிப்புணர்வு அங்கு உருவாகியது.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் புலிகள் மிகக் கவனமாக இருந்தார்கள். தமக்கு எதிரான கருத்துகள் எழக்கூடிய சந்தர்ப்பங்களை தவிர்த்தார்கள். அதனை இவ்வாறு கூறலாம். கலை ஆளுமை மிக்கவர்களை உள்வாங்கிக் கொள்ள முயற்சித்தார்கள். புலிகளின் கலாசார வேலைகள் ஒன்றும் மக்களைக் கவரவில்லை. இராணுவச் சீருடையும், கலை எனும் பெயரில் பிரச்சாரமும் மக்களிடம் எடுபடாமல் போயின.

## கயிற்றை

## கொஞ்சம் நீளமாக விட்டு... !

கணக்கான இளைஞர்களும், யுவதிகளும் போரில் அநியாயமாகக் கொல்லப்படுகிறார்கள். இதனை இவர்கள் அங்கீகரிக்கிறார்கள். தங்கள் பிள்ளைகளை வெளிநாடுகளுக்கும், கொழும்பிற்கும் அனுப்பிவிட்டு போராட்டம் பற்றி எழுதுகிறார்கள். இவர்களிடம் ஒரு கேள்வி: 'உங்கள் மகன், உங்கள் மகள், உங்கள் சகோதரர், உங்கள் நெருங்கிய உறவினர் இப்போரில் ஈடுபட நீங்கள் அனுமதிப்பீர்களா? இறந்து போவது யார் யாரோ பெற்ற பிள்ளை' இது தான் எனது ஆதங்கம். இவர்கள் தங்கள் இருப்பை உறுதிப்படுத்த, ஸ்திரப்படுத்த வேஷம் போடுகிறார்கள். பேராசிரியர் சிவத்தம்பி புலிகளின் மேடையில் ஏறி எதைப் பேசினாலும், 'பேராசிரியரே புலிகளை ஆதரிக்கிறார். நாங்கள் ஆதரித்தால் என்ன பிழை?' என சாதாரண மனிதன் புலிகளுடன் சேர்கிறான். இறந்து போகிறான். இதுவே எனக்குள் எழுகின்ற சிக்கல்.

**'பறக்குதடா யாழ் கோட்டையில்
எங்கள் புலிக்கொடி
பகைவரிடம் போய்ச் சொல்லுங்கள் இதுதான் முதல் அடி'**

புலிக்கொடி பறக்கிற யாழ் கோட்டையின் அருகில் 1991 ஓகஸ்ற் மாதத்தில் முத்தமிழ் விழா நடைபெற்றது. பண்ணையில் இருந்து கடற்காற்று குபுகுபு எனப் பாய இதமான குளிரை ரசித்தபடி இலட்சக் கணக்கான மக்கள் விழாவைப் பார்க்கத் திரண்டனர். எண்பதுகளின் முன்னர் நடைபெறுகின்ற கோயில் திருவிழாக்களை இன்னொரு முறை மக்கள் ரசித்தனர். லவுட் ஸ்பீக்கரில் புலி முழங்கியது. எங்கேயோ ஒளித்திருந்த சிகரங்கள் வீதியை அலங்கரித்தன. சப்பறங்களும் வரிசையிட்டன. பொம்மர், ஷெல் அடிகளும், துப்பாக்கி வேட்டுச்சத்தங்களும் வாண வேடிக்கை இல்லாக் குறையைப் போக்கின.

முத்தமிழ் விழாவில் தான் ஈழத்து நாடக அரங்க வரலாற்றில் முக்கியத்துவம் பெறும் **'உயிர்த்த மனிதர் கூத்து'** எனும் நாடகம் அரங்கேறியது.

இடையில் ஒரு திரைப்படம் (அல்லது வீடியோ படம் ) பற்றிய குறிப்பினைத் தருதலும் அவசியம். புலி

ஆனால் முதன்முயற்சி என்பதும் வசதிக் குறைவான சூழலில் இத்தகைய திரைப்படம் வெளிவந்ததன் அழுத்தமும், குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியன. யாழ்ப்பாணம் ஸ்ரீதர் திரையரங்கில் வீடியோ வினூடாக இத்திரைப்படம் மக்களுக்கு தினசரியாக ஒளிபரப்பப்பட்டது.

திரைப்படம் இவ்வாறு குழந்தைப் பருவத்தில் இருந்த போதும், நாடக முயற்சிகள் பெரிதும் குறிப்பிட வேண்டியன. முன்னரும் நாடக முயற்சிகள் சில இடம் பெற்றன. பல்கலைகழக கலாசாரக் குழுவின் **'மண் சுமந்த மேனியர்'** காலம் போக, 1990 இல் யாழ்ப்பாணத்து நாடக அரங்கு புதுப்போக்கிற்குப் பாய்ந்தது. இதற்கு மிகச் சரியான .உதாரணம் **'உயிர்த்த மனிதர் கூத்து'**

இந்நாடக முயற்சிகளில் மிகக் குறிப்பிடப்பட வேண்டியவர்கள் **குழந்தை ம.சண்முகலிங்கம், க.சிதம்பரநாதன்** போன்றோராவர். **நாடக அரங்கக் கல்லூரி** இதன் பின்னணியில் உழைத்தது. நாடக பயிற்சிப் பட்டறை வகுப்புக்கள் யாழ்ப்பாணத்திலும், கிளிநொச்சியிலும் இடம் பெற்றன. இவ் வகுப்புகள் நாடக அரங்கிற்குப் புத்தூக்கத்தைக் கொடுத்தது. சகல துறைகளிலும் பின் தங்கி இருந்த கிளிநொச்சி மாவட்டம் நாடக அரங்க வளர்ச்சியில் முன்னேறியது. கிளிநொச்சி கல்வித் திணைக்களப் பணிப்பாளர் **திரு.கந்தசாமி** அவர்கள் குறிப்பிடப்பட வேண்டியவர்.

இக்காலச் சூழலில் எழுந்த முதல் நாடகம்**'மாற்றம்'** என்பதாகும். குழந்தையின் பிரதியை சிதம்பரநாதன் நெறியாள்கை செய்தார். கல்வி அமைப்பை விமர்சிக்கிற நாடகம். கல்வி அமைப்பு நிராகரிக்கப்படுகிறது. ஆனால் அந்நிராகரிப்பானது நாடகம் விரும்பியோ, விரும்பாமலோ, கல்வியை விட்டு, விட்டுப் போராட்டத்தில் இணையுங்கள் எனக் கூறுவதன் மூலமாக புலிகளுக்கு ஆட்சேர்க்கிற வேலையைச் செய்கிறது. நாடகம் கலாபூர்வமாக வெற்றிகரமானதொன்று. அரங்கின் புதிய பரிமாணத்தை இந் நாடகம் எய்தியது எனலாம். நாடகத்தின் கலாபூர்வமான அம்சங்கள்

வேறு கலை குழுக்களின் கலை முயற்சிகள் கூட புலிகளைப் புகழ்வதாக அமைய வேண்டும் என நிர்ப்பந்தித்தார்கள். இதனை 1990 நவம்பரில் நடைபெற்ற மாவீரர் நாளில் உணர முடிந்தது.


இந் நேரத்தில் கலையை வேறு கோணத்தில் பார்க்க முயற்சித்தார்கள். கலைஞர்களுக்கு சுதந்திரம் கொடுக்கிறோம் என கலைஞர்களை உள்வாங்க முயற்சித்தனர். பொதுமக்களை ஒரு போது மாத்திரம் சந்தித்திருந்த பிரபாகரன் கலைஞர்களை அடிக்கடி சந்தித்தார். கலை பற்றிய தனது கோட்பாடுகளை முன்வைத்தார். கலைஞர்கள் தலைவர் பற்றிய பிரமிப்புடன் வெளியே வந்தனர். (இவை குறித்து முதற் கட்டுரையில் குறிப்பிட்டிருந்தேன்.) இரண்டாவது கட்டமாக படைப்புகளுக்கான நிதியை அளிக்க முன் வந்தனர். இவ்வகையில் **மாற்றம்** குறிப்பிட்டு சொல்லவேண்டிய முதலாவது நாடகம். **சந்தனக் காடுகள்** போன்ற மிக மோசமான நாடகங்களும் மேடையேறின.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத் தலைவர் புதுவை இரத்தினதுரை கூறுவார். 'நீங்கள் புலிகளைப் பற்றி நாடகம் போட வேண்டாம். அதனை புலிகள் செய்வார்கள். நீங்கள் மக்களின் பிரச்சினைகளை வைத்து நாடகம் தயாரியுங்கள்' என்பார். ஆனால் இவரின் கீழ் வேலை செய்கிற கலைபண்பாட்டு கழக வலிகாமப் பொறுப்பாளர் கனகரத்தினமோ, கிளிநொச்சிப் பொறுப்பாளர் செழியனோ 'நீங்கள் எங்களைப் பற்றி நாடகம் போடலாமே' என்பார்கள். அல்லது புலிகள் பற்றி படைப்பவர்களை ஊக்கிவிப்பார்கள். ஒரு பக்கம் தடவிக் கொடுத்தலும், மறுபக்கம் தட்டி விடுதலும் எனும் இரண்டக நிலை காணப்பட்டது. இதனை கலைஞர்கள் புரிந்து கொள்ளவில்லை. சுதந்திரம் என்று நம்புகிறார்கள். கயிறைக் கொஞ்சம் நீளமாக விட்டு மாட்டைக் கட்டியிருக்கிறார்கள், அவ்வளவுதான்.

**கலாநிதி**
**ஆ.கிருஷ்ணதுரை**

# ஒரு வார்த்தை எழுத விடு

## ஒரு கலந்துரையாடல்




தேசிய கலை இலக்கியப் பேரவையின் நான்கு நூல்களின் விமர்சன அரங்கு கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் மழை பெய்து கொண்டிருந்த ஒரு சனிக்கிழமை மாலைப் பொழுதில் நடைபெற்றது. விமர்சித்தோரின் பட்டியல் பெரிது. இளங்கவிஞரொருவர் ''முருகையன் கவிஞன் இல்லை'' என்றார். அதிர்ச்சி அலை அங்கு பரவியது. இது போகிற போக்கில் எறிகிற வெறும் வார்த்தைகளா? அல்லது 'முதிரா'க் கவிஞனின் வெம்பிய கருத்துக்களா? அல்லது இன்றைய தலைமுறை யாவற்றையும் மறுமதிப்பீடு செய்ய விரும்புகிறதா? அன்றைய கலந்துரையாடலில் மகாகவி, சண்முகம் சிவலிங்கம் போன்றோர் கூட கவிஞர் அல்லர் என்றார் இன்னொருவர். இவை எல்லாம் ஆச்சரியமான குறிப்புக்கள். அந்த இளங்கவிஞனிடம் ஒரு கேள்வி: ''கவிஞனே, எதை ஆதாரமாக வைத்து முருகையனைக் கவிஞன் இல்லை என்கிறாய்?

## ஒரு கடிதம்



"......நீ உங்கிருக்கிறாய். கொழும்புக்கும் ஒஸ்லோவுக்கும் எனக்கு வித்தியாசம் தெரியவில்லை. ஒன்று சிறீலங்கா. மற்றது நோர்வே. தமிழீழத்தின் அயலில் இருக்கிறேன் என நீ சின்னச் சந்தோஷம் அடையலாம். சேர்ந்து வேலை செய்யலாம் என்று இருந்த நம்பிக்கையும், அதனால் ஏற்படக்கூடிய மகிழ்ச்சியும், உற்சாகமும் கலைந்து போய் விட்டன. இன்று காலை கூட உங்களுடன் வேலை செய்த நாட்களை எண்ணிப் பார்த்தேன். நாம் சேர்ந்து வேலை செய்ய சந்தர்ப்பம் கிடைத்தால் இன்னும் எவ்வளவோ 'பறக்க' முடியும் என நான் விசுவாசமாக நம்புகிறேன். அவரவர் அப்பப்ப தன்தன் சுய விருப்பப்படி எடுத்த நடவடிக்கைகளால் எல்லாம் சிதைந்து போயிற்று. புறச்சூழலை மட்டும் குற்றம் சொல்லி என்ன பலன்? எமது அக நிலைமைகளும் காரணம் தான்... ''நோர்வேயிலிருந்து நண்பர் எழுதிய கடிதத்தின் சில வரிகள் இவை.

## ஒரு கவிதைத் தொகுப்பு




தேசிய கலை இலக்கியப் பேரவையின் வெளியீடாக **சிவசேகரத்தின்** கவிதைகள் **'தேவி எழுந்தாள்'** எனும் தொகுப்பாக வெளி வந்துள்ளது. இவரது புத்திசாலித்தனமான வரிகள் படிமங்களாகி கவிதையை உயிரிழக்கச் செய்வதும் உண்டு. (மகேசருக்குத் தெரிந்தது) பாரதியார், பாலஸ்தீனக் கவிதைகள் இவர் கவிதைகள்ள பாதிப்பதையும் காணமுடியும். (தேவி எழுந்தாள், தீ, விடுதலைக்கு அழைப்பு) ஆயினும் எளிமையான இவரது பல கவிதைகள் உயிருடன் இயங்குகின்றன. அரியது கேட்கின்,அமைதிகாத்தல், யாதும் ஊரே, அந்நியம், நான் வருவேன் கங்கா, அசுரன் போன்றன ஈழத்துக் கவிதையின் தரமுயர்த்தும். கேலியும் கிண்டலும் அழகுற வந்தாலும் மானுட நேசிப்பும், மனித விடுதலையும் கவிதையின் மூச்சாக இயங்குவதால், இக்கவிதைகள் வாழும். யாதும் ஊரே கவிதையிலிருந்து சில வரிகள்

**''நாமே நமக்குப் பகையென ஆனோம்.
நம்மை நாமே அழித்திட உறுதி
உண்டாம் அதனால்
எம்மூர் தவிர்ந்த யாதும் ஊரே
எம்மவர் தவிர்ந்த யாவரும் கேளீர்
தீதும் அழிவும் பிறர் தர வேண்டா.''**



# ”தமிழர்களுடைய எதிர்காலத்தை சிங்களவர் தீர்மானிக்க முடியாது”

## யுக்திய ஆசிரியர் சுனந்த தேசப்பிரிய



- சுனந்த

வாராந்தம் 65000 பிரதிகள் விற்பனையாகும் யுக்தியஎன்கிற வாராந்தப் பத்திரிகையின் ஆசிரியர் திரு. சுனந்த தேசப்பிரிய.

யுக்திய சரிநிகரின் சகோதரப் பத்திரிகை.

இனமுரண்பாடு கூர்மையடைந்தும் யுத்தமே வாழ்வாகவும் உள்ள தேசத்தில் யுத்தத்தை நிறுத்தவும் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை அங்கீகரிக்க வேண்டிய அவசியத்தையும் சிங்கள மக்களிடம் எடுத்துச் செல்வதில் அக்கறையுடன் செயலாற்றுபவர் சுனந்த.

கூடவே பத்திரிகைச் சுதந்திரத்திற்காகவும் கருத்துச் சுதந்திரத்திற்காகவும் குரல் கொடுத்து வருபவர். அவருடனான நேர்காணலை இங்கே தருகிறோம்.
ஆ-ர்.

**சரிநிகர்:**

குறிப்பிடத்தக்களவான வாசகர்களைக் கொண்ட சிங்களப் பத்திரிகை என்ற வகையில் தேசிய இனப்பிரச்சினை தொடர்பான எத்தகைய கருத்துக்களை எடுத்துச் சொல்வது அவசியம் எனக் கருதுகிறீர்கள்?

**சுனந்த:**

சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுள்ள மற்றைய சிங்களப் பத்திரிகைகள் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக எந்த விதமான கருத்துக்களை முன்வைக்கின்றன என்பது தொடர்பாக நாம் கவனமெடுத்தல் வேண்டும்.

முதலாவது, இலங்கை சிங்கள பௌத்தர்களுக்கு மட்டுமே சொந்தமானது என அவை கூறுகின்றன. எமது கடமை இலங்கை ஒரு பல்லின பலமதங்களைக் கொண்ட நாடு. அது இங்கு வாழும் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள்.மலையகத்தவர் என எல்லா இனங்களைச் சேர்ந்தவர்களுக்கும் சொந்தமானது என்ற முக்கிய விடயத்தை வாசகர் மத்தியில் எடுத்துச் சொல்ல வேண்டும்.

இரண்டாவது, தமிழ் மக்கள் ஆயுதம் ஏந்தியதால் தான் இந்த யுத்தம் ஆரம்பமாகியுள்ளது. எனவே யுத்தத்திற்கான காரணம் தமிழ் மக்களே என தமிழர்கள் மீது பழியைப் போடுகின்றன. ஆனால் உண்மை அதுவல்ல. சுதந்திரத்திற்கு முன்பிருந்தே தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளார்கள். ஆகவே இந்த யுத்தம் ஆரம்பிப்பதற்கு சிங்கள ஆளும் கட்சிகளும், அதன் தலைமையுமே பெருமளவான பொறுப்பை ஏற்க வேண்டும் எனும் காரணத்தைச் சிங்கள மக்களுக்குப் புரிய வைக்க வேண்டும்.

மூன்றாவது, சாதாரண சிங்கள மக்களுக்கெதிராக,சிங்களக் கிராமங்களைத் தீவிரவாதிகள் தாக்குகிறார்கள். இதனூடாக எல்லாத் தமிழர்களையும் புலிகளாக, சிங்கள மக்களுக்கெதிரானவர்களாக காட்டுகிற அபாயம் நிகழ்கிறது. இந்த இடத்திலும் உண்மை அவ்வாறில்லை. என்றும் சாதாரண சிங்களமக்களுக்கெதிரான தாக்குதல் நடத்துபவர்களிலிருந்து தமிழ் மக்களுடைய அபிலாஷைகள் வேறுபட்டுள்ளன. சிங்கள மக்கள் மீதான தாக்குதல்களுக்கு அவர்கள் உடந்தையல்ல என்பதையும் எடுத்துச் சொல்ல வேண்டும்.

நான்காவதாக தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் தீரக்கப்பட வேண்டும். ஒரு அரசியல் தீர்வினை முன்வைக்காமல் புலிகளையோ அல்லது தீவிரப்போக்கையோ ஒருபோதும் முறியடித்துவிட முடியாது.

இந்த முக்கியமான நான்கு விடயங்களையும் சிங்கள மக்கள் மத்தியில் எடுத்துச் செல்வது அவசியம் என்ற அடிப்படையில் செயற்பட்டு வருகிறோம்.

**சரிநிகர்:**

வட. கிழக்கு இணைப்பு, சுய நிர்ணய உரிமை, தமிழ் முஸ்லிம் மக்களுக்கான அதிகாரப் பரவலாக்கல் மலையக மக்களின் பிரஜா உரிமை போன்ற முக்கியமான விடயங்கள் தொடர்பாக 'யுக்திய' எத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டு வெளிவருகிறது?

**சுனந்த:**

மேற்குறித்த வியங்கள் தொடர்பாக நிறையவே எழுதி யுள்ளோம். குறிப்பாக தமிழ் மக்களிடையேயிருந்து எவ்வாறு ஆயுதக்குழுக்கள் தோன்றின என்பதை வரலாறாக எழுதியுள்ளோம். தமிழ்க் கைதிகள் எவ்வாறான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கிறார்கள். அரசாங்கம் தமிழ் மக்களுக்கெதிராக எவ்வாறான ஒடுக்கு முறைகளை மேற்கொள்ளுகிறது என்பது தொடர்பாகவும் நாம் எழுதி வருகிறோம். அதே வேளை இனப்பிரச்சினை பூதாகரமாவதற்கு முன் இப்பிரச்சினைக்குத் தீர்வாக இடதுசாரிக் கட்சியைச் சேர்ந்த என்.எம்.பெரேரா 'ஒரு மொழி என்றால் இரு நாடு, இரு மொழி என்றால் ஒரு நாடு'' என தீர்க்கமாகக் கூறியிருந்தார். இதே போல எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க சமஷ்டி முறையை முன் வைத்திருந்தார் என்கிற விடயங்களை எடுத்துக் கூறி மக்களுக்குடைய சிந்திக்கும் ஆற்றலை முன்னோக்கித் தள்ள முயல்கிறோம்.

இது தவிர இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் போது - அது எவ்வளவு குறைபாடுகளைக் கொண்டிருந்த போதும் - அதிலிருந்த அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக நாம் அதை ஆதரித்து எழுதினோம். இதே போல மாகாணசபைகள் விடயத்திலும் - அதிலும் எவ்வளவு பிரச்சினைகள் இருந்த போதும் - அதை ஆதரித்தோம்.

இன்னும் மனித உரிமைகளுக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்களின் அறிக்கைகளை சிங்களத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டிருக்கிறோம். எமது பத்திரிகையில் மிதவாதத் தமிழ் அரசியல்வாதிகளின் பேட்டியினூடாக அவர்களது கருத்துக்களை சிங்கள மக்கள் தெரிந்து கொள்ள வாய்ப்பேற்படுத்தி இருக்கிறோம்.

எங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமானால், எமது பத்திரிகையூடாக பிரபாகரன் சிங்கள மக்களுக்கு ஏதாவது சொல்ல விரும்பினால் அதையும் வெளியிடத் தயாராயுள்ளோம்.

மலையக மக்கள் தொடர்பாக சிங்கள மக்கள் மத்தியில் உள்ள அபிப்பிராயம் என்னவென்றால் மலையக மக்கள் வந்து சிங்கள மக்களுடைய காணியைப் பறித்தது மட்டுமன்றி அவர்களுடைய வேலைவாய்ப்பு, பொருளாதாரம் போன்றவற்றையும் பறித்து தம்மை மலையகத்திலிருந்து விரட்டுகிறார்கள்' என்பதாகும். ஆனால் உண்மை அதுவல்ல. பிரித்தானியர்களால் பெருந்தோட்டங்களில் வேலை செய்ய கூலிகளாகவே கொண்டு வரப்பட்டனர். கொண்டு வரப்பட்டதிலிருந்து இன்றுவரை கூலிகளாகவே இருக்கும் அவர்களுக்கு எவ்வளவோ நெருக்கடிகளும் பிரச்சினைகளும் உண்டு. அந்தப் பிரச்சினைகள் தொடர்பாக நாம் சிங்கள மக்களுக்கு எடுத்துச் சொல்லி வருகிறோம்.

முஸ்லிம் மக்களது பிரச்சினை ஒரு புதிய விடயமாகிறது. மற்றையது; முஸ்லிம் மக்களது அபிலாஷைகளைச் சரியாக வெளிப்படுத்துவது யார் என்பது இன்னும் தெளிவாகவில்லை. இப்போதைக்கு அஷ்ரஃப்தான் சில விடயங்களைப் பேசிக்கொண்டிருக்கிறார். எனவே அவருக்கு நாம் முக்கியத்துவம் கொடுத்து வருகிறோம். அதேவேளை இப்பிரச்சினையைப் பற்றி முடிவாகச் சில அபிப்பிராயங்களைச் சொல்வது கடினமாயுள்ளது. ஏனெனில் முஸ்லிம்கள் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் பரந்து வாழ்ந்து வருகிறார்கள். இதனால் அவர்களுக்கான அதிகாரப் பரவலாக்கல், நிர்வாகம் தொடர்பாக தீர்மானிக்க வேண்டியுள்ளது. எனவே இது தொடர்பான நிறையப் கருத்துப் பரிமாற்றம் நிகழ வேண்டும். அதற்கு எமது பத்திரிகையில் முக்கியமான இடம் கொடுத்து வருகிறோம். தமிழ் மக்களது சுய நிர்ணய உரிமையை ஏற்றுக் கொண்டுள்ளோம். தமிழ் மக்கள் எந்த விதமான அச்சுறுத்தலுமின்றி தமது எதிர்காலத்தைத் தீர்மானிக்க அவர்களுக்கு பூரண உரிமை உண்டு. அத்தகைய சூழல் ஒன்று உருவாக்கப்படல் வேண்டும். தமிழர்களுடைய எதிர்காலத்தை சிங்களவர்கள் தீர்மானிக்க முடியாது என்பதை எமது பத்திரிகையில் ஆணித்தரமாகச் சொல்கிறோம். தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்படத்தான் வேண்டும் என்று இலகுவாக யாரும் வார்த்தையாடிவிட்டு போய் விடலாம். இதை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பதுதான் சிக்கலானது, கடினமானது. ஏனெனில் பெரும்பான்மையான தமிழ் மக்கள் வட கிழக்கில் வாழ்ந்தாலும் ஏனைய பகுதிகளிலும் வாழ்கிறார்கள். முஸ்லிம் மக்களும் அவ்வாறுதான் பரந்து வாழ்கிறார்கள். இந்நிலையில் சுயநிர்ணய உரிமையை அமுல்படுத்துவது என்றால் அதை எவ்வாறு செய்ய வேண்டும் என்பது தொடர்பாக உண்மையாக நாம் ஆராய வேண்டும். ஆகவே பொறுமையுடன் விடயங்களைப் பேசுவதற்கான நிலைமை உருவாக்கப்படல் வேண்டும். நாங்கள் இது தொடர்பாக எமது பத்திரிகையில் எழுதி வருகிறோம்.

**சரிநிகர்:**

ஜாதிக சிந்தனையை, ஹெல உருமய இயக்கம் போன்றவை சிங்களப் பேரினவாதத்தை வளர்த்து வருவதையிட்டு யுக்திய என்ன சொல்ல விரும்புகிறது?

**சுனந்த:**

எமது பத்திரிகையின் ஆரம்பத்திலிருந்து இன்று வரை இவ்வாறான பேரினவாத கருத்துக்களுக்கெதிராக எழுதி வந்திருக்கின்றோம். குறிப்பாக அன்றைய இனவாதியான சிறில் மத்தியூவிலிருந்து இன்றைய ஜாதிக சிந்தனய, ஹெல உருமய என்பவற்றின் பிதாமகர்களான நளின் டி சில்வா, திலக் கருணாரத்ன போன்றவர்களின் இனவாதக் கருத்துக்களுக்கு ஒரு போதும் இடமளிக்காமல் அது எவ்வளவு தூரம் தவறானது என்பதை சிங்கள மக்களுக்கு எடுத்துச் சொல்லி வந்திருக்கிறோம்.

**சரிநிகர்:**

சுதந்திரமான ஒரு பத்திரிகையை வெளியிடுவதில் உங்களுக்குள்ள நெருக்கடிகள் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிட முடியுமா?

**சுனந்த:**

அரசியல் ரீதியான நெருக்கடியை ஒரு புறம் வைத்துவிட்டுப் பார்த்தாலும் கூட எமது நாட்டில் சுதந்திரமான ஒரு பத்திரிகையை நட்டமின்றி வெளியிடுவது என்பது கடினமான ஒரு விடயம். மற்றைய தேசியப் பத்திரிகைகளுக்கு கிடைக்கும் பத்திரிகைக் கோட்டாவோ, விளம்பரமோ எமது பத்திரிகைக்கு இல்லை. எனவே இலாபகரமாக பத்திரிகையை வெளியிடுவதாயின் சாதாரண பத்திரிகைகள் போன்று இனவாதம், பாலியல் விவகாரங்கள் போன்ற மலினமான விடயங்களை எழுத வேண்டியிருக்கும். ஆனால் வெறுமனே விற்பனை அதிகரிப்பிற்காக நாம் எமது கொள்கைகளைக் கைவிடத் தயாரில்லை.

மறுபுறத்தில் அரசியல் ரீதியான நெருக்கடி எனும் போது எமது பத்திரிகைக்கு எதிரான நான்கு வழக்குகள் போடப்பட்டு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. இதே வேளை அரசாங்கத்தின் அரசியல் வாதிகள், குறிப்பாக ஜனாதிபதி உட்பட நாம் பொய் எழுதுவதாகவும் தமக்கு விரோதமாக பிரச்சாரம் செய்வதாகவும், எமக்கெதிராக நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் மிரட்டி வருகிறார்கள்.

இதுதவிர இன்றைய பத்திரிகையாளர் எந்நேரமும் கத்தி சொருகப்படுவதையோ, இனம் தெரியாதவர்களால் கமெராவும் பிடுங்கி நொருக்கப்பட்டு தாக்குதலுக்குள்ளாவதையோ ஒவ்வொருகணமும் எதிர்பார்த்திருக்க வேண்டிய சூழல் தான் இது என்பது நான் சொல்லாமலே உங்களுக்கு புரியும்.

**சரிநிகர்:**

'யுக்திய' ஒரு சிங்கள முற்போக்குப் பத்திரிகை என்ற ரீதியில் சரிநிகர் வாசகர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறது?

**சுனந்த:**

எங்களது பத்திரிகை தொடர்பாக தெற்கில் எழுந்த கேள்வி என்னவென்றால் ''உங்களது பத்திரிகை எப்போதும் தமிழ் மக்களுக்கு சார்பாக எழுதுகிறது. தமிழ் மக்களை விமர்சிப்பதில்லை. சிங்கள மக்களைத்தான் எப்போதும் விமர்சிக்கிறீர்கள். ஏன் என்பதுதான் அது. அதற்கு நாம் சொன்ன பதில் என்னவென்றால் ''எமது வாசகர்கள் சிங்கள மக்கள். அதில் தமிழ் மக்களை விமர்சித்துப் பிரயோசனமில்லை. முக்கியமான விடயம் தமிழ் மக்கள் முகம் கொடுக்கும் அத்தனை பிரச்சினைகளும் என்னவென்று சிங்கள மக்கள் புரிய வேண்டும். அப்படிப் புரிதல் தான் இனப்பிரச்சினைக்கான ஒரு அரசியல் தீர்வுக்கான உந்துதலாக அமையும். இவ்வாறு தமிழ் மக்களுடைய பிரச்சினைகளையும், அபிலாஷைகளையும் சிங்கள மக்கள் மத்தியில் எடுத்து வருகிற அதே நேரம், எமது சகோதரப் பத்திரிகையான சரிநிகர் தமிழ் மக்கள் மத்தியிலான ஆயுதக் கலாசாரம், கருத்துச் சுதந்திரமின்மை, ஜனநாயக மறுப்பு, தமிழ் இனவாதம், குழுவாதம் போன்ற பிற்போக்கான அம்சங்களை விமர்சிப்பதனூடாகவும், சிங்கள மக்கள் பற்றிய தவறான அபிப்பிராயங்களை நீக்குவது தொடர்பாகவும், தமிழ் மக்களின் ஜனநாயக பூர்வமான வாழ்வியலுக்காகவும் பணியாற்றிக் கொண்டிருக்கிறது. இதைத்தான் நாம் நடைமுறையில் செய்து வருகிறோம். இந்தக் கண்ணோட்டத்தில் சரிநிகர் வெளிவருகிறது; தொடர்ந்து வெளிவர வேண்டுமென எதிர்பார்க்கிறோம்.

நன்றி - நூலகத்திட்டம்





**தொண்டமான் எதிர்ப்பு,தமிழர் எதிர்ப்பு,இணைப்பு எதிர்ப்பு**

# ஸ்ரீமாவோவின் புதிய கொள்கை

**பேராசிரியர் பஸ்தியம்பிள்ளை**
**கொழும்பு பல்கலைக்கழகம்**

*வட-கிழக்குஇணைப்பை ஸ்ரீ.ல.சு.கட்சி ஒரு போதும் ஆதரிக்கப் போவதில்லை எனவும் ஜனாதிபதி தேர்தல் காலத்தில் ஜனநாயக மக்கள் கூட்டினால் (D.P.A.) இனப்பிரச்சினைத் தீர்வுக்காக முன்வைக்கப்பட்ட திட்டத்தை மக்கள் நிராகரித்து விட்டார்கள் என்றும் அண்மையில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.*

*இதற்கு முன்னர் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் முன் அமைச்சர் தொண்டமானால் முன்வைக்கப்பட்ட யோசனைகளைத் தாக்கியும் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது ஸ்ரீ.ல.சு.கட்சி.*

*ஸ்ரீ.ல.சு.கட்சியின் முழு ஆதரவுடன் தயாரிக்கப்பட்ட ஜனநாயக மக்கள் கூட்டின் (D.P.A.) திட்டத்திற்கும் தொண்டமானின் ஆலோசனைகளுக்கும்இடையேயுள்ளஒற்றுமைகளைச் சுட்டிக்காட்டுகிறார் கட்டுரையாளர் பேராசிரியர் பஸ்தியம்பிள்ளை.*

*இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து காத்திரமான பங்காற்ற வேண்டிய ஸ்ரீ.ல.சு.கட்சியின் இப்போக்கு தீர்வு முயற்சியின் பயன்பாடு குறித்த சந்தேகத்தை மேலும் வளர்த்துச் செல்வதாயுள்ளது.*

*ஆ-ர்.*

தொண்டமானின் யோசனைகள், இலங்கை ஒரு பல்லினப் பாங்குள்ள நாடு என்பதையும், இது மாற்றப்பட முடியாதவொன்று என்பதையும் தெளிவாக இனங்காட்டுகின்றன. சிறுபான்மை இனங்களைப் பொறுத்தவரை, குறிப்பாக தமிழர்களைப் பொறுத்தவரை அவர்களது மொழி மற்றும் கலாசார அடையாளங்கள் மிகவும் ஆழமானவை. அவை இவற்றை இழந்து பிறிதொன்றுடன் ஒன்று கலந்துவிட முடியாதளவுக்கு தனித்துவ வலிமை மிக்கவையுமாகும்.

சமாதானம் மற்றும் அரசியல் ஸ்திரப்பாட்டை உருவாக்கவென தொண்டமானும் இ.தொ.காவும் முன்வைத்துள்ள யோசனைகள், தமிழ்மக்களின் உணர்வுகள், அவர்களின் அச்சத்தைக் குறைப்பதற்கான அவசியம் என்பவற்றில் கவனம் செலுத்தியுள்ளன.

அமைதியைக் காண்பதற்கு அடிப்படையான அரசியல் ஒழுங்குகள் எவையாயினும் அவை அவசியமான சட்டவரையறைகளினூடாகவே செய்யப்பட வேண்டும். சிறுபான்மையினர், தமது எதிர்பார்ப்புகள் கவனிக்கப்படும் என்பதைஉணரக்கூடிய விதத்தில் இப்புதிய சட்ட வரையறைகள் அமைய வேண்டும் என்பதனை தொண்டமானின் யோசனைகள் வலியுறுத்துகின்றன. ஆயுத பலம் மட்டுமே தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்த்துவிட முடியாது. வடக்கு கிழக்கிற்கு கூடியளவு சுயாட்சியை வழங்குவதே நாட்டில் பிளவு ஏற்படாது தடுக்கக்கூடிய ஒரே வழியாகும் என தொண்டமானின் யோசனைகள் நம்புகின்றன.

வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள மக்களுடன் பெரும்பான்மைச் சமூகமும் அரசும் தங்களது அதிகாரங்களைப் பங்கிட்டுக் கொள்ள வேண்டும். இது அமைதிக்கு முக்கியமானது; மாகாண அளவில் தன்னாதிக்க ஒழுங்கு இருக்க வேண்டும்.

**மேலுள்ள இந்தக் கருத்துக்களையும் ஜனநாயக கூட்டணியின் யோசனைகளையும் ஒப்பிடுகையில் நாம் பல ஒற்றுமைகளை அவற்றின் நோக்கிலும் சிந்தனையிலும் மிகத் தெளிவான ஒற்றுமைகளைக் காணக்கூடியதாக உள்ளது.**

அதிகாரப் பகிர்வு தொடர்பாகப் பேசுகையில், மத்திய அரசுக்கு அவசியமானவை தவிர்ந்த எல்லா அரச அதிகாரங்களும் (சட்டவாக்கம், நிறைவேற்றதிகாரம் மற்றும் நீதித்துறை) பரவலாக்கப்பட வேண்டுமென்று ஜ.ம. கூட்டு தெளிவாக முன்வைக்கிறது. மத்திய அரசுடன் இருக்க வேண்டுமென அது குறிப்பிடும் அதிகாரங்கள்; பாதுகாப்பு, வெளிநாட்டுத் தொடர்பு, போக்குவரத்து, தொலைத்தொடர்பு, நிதி, மின்சாரம், மேல்நீதிமன்றம், பிரசா உரிமை, தேர்தல், தேசிய வளங்கள், தேசியக்கல்வி, தேசியத்திட்டமிடல், கடல் மற்றும் அகழ்வாய்வு நிலைகள் போன்றவையாகும்.

தொண்டமானின் யோசனைகளோ மறுபுறத்தில், தற்போது நடப்பிலுள்ள பட்டியலை இல்லாதொழிக்க வேண்டும் என்றும், மாகாணப் பட்டியலில், காணி, சட்டம்-ஒழுங்கு, திட்டமிடல், பொருளாதார விவகாரம், பொருளாதார ஒழுங்குகள், மீன்பிடி, நிலஅளவை, வனபரிபாலனம், நீர்ப்பாசனம், விவசாயம்; கல்வி மற்றும் கல்விசார் சேவைகள், உயர்கல்வி, சுகாதாரம், புனர்வாழ்வு-புனர்நிர்மாணம், சுற்றுலா, சுரங்கத் தொழில், சக்தி, துறைமுகம், நெடுஞ்சாலை போன்ற இன்னோரன்ன பிறவிடயங்களும் உள்ளடங்கியாக வேண்டும் என்கின்றன. இவற்றைக் கவனிக்கும்போது, தொண்டமானது யோசனைகளும். தேசிய பாதுகாப்பு, வெளிநாட்டுத் தொடர்பு, நிதி போன்றவைகளை மத்தியுடன் வைத்திருப்பதை விரும்புவது தெரிகிறது. அதிகாரப் பரவலாக்கத்தைப் பொறுத்தவரை ஜனநாயக மக்கள் கூட்டின் கருத்துக்கட்கும் , தொண்டமானின் கருத்துக்கட்கும் இடையில் பாரிய வேறுபாடு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

சிறுபான்மையினரின் பாதுகாப்பினைப் பொறுத்தமட்டில், ஜ.ம.கூட்டின் கருத்துக்கள் வடக்கு கிழக்கிலுள்ள தமிழர்களைப் பெருவாரியாகக் கொண்டதும், முஸ்லீம்களைப் பெருவாரியாக கொண்ட பகுதிகளை வெளியொதிக்கியதுமான ஒரு அலகினை உருவாக்கும் நோக்கத்திற்கு சாதகமானவையாக உள்ளன. முஸ்லிம்களுக்கு, முஸ்லிம்களைப் பெருவாரியாகக் கொண்ட ஒரு அலகினை, அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களிலுள்ள பெருமளவு முஸ்லிம்களை கொண்ட பகுதிகளில் உருவாக்கலாமென அது எண்ணுகிறது. தொண்டமானின் யோசனைகள் வடக்கு கிழக்கு இணைப்பை முன்மொழிந்துள்ள போதிலும் முஸ்லிம் மக்களுக்குரிய இடத்தை வழங்குவதிலும் கவனம் செலுத்துகின்றன. அவர் முஸ்லிம் பிரதேச சபைகளின் அங்கத்தவர்கள், தலைவர்கள் அனைவரையும் கொண்ட ஒரு யூனியன் பிரதேசசபையைப் பிரேரிக்கின்றார்.

ஆக இங்கும் கூட தமிழ்மக்களுக்குரிய அலகின் அதிகாரப்பகிர்வு மற்றும் முஸ்லிம்களுடைய நலன்களை ஒரு தனி அலகின் மூலம் பாதுகாப்பது என்ற அம்சத்தில் தொண்டமானது யோசனைகளும் ஜ.ம.கூ.வினுடைய யோசனைகளும் நோக்கத்தில் பெருமளவில் வேறுபடவில்லை. அவை வேறுபடுவது, அவற்றின் அமைப்பு முறையிலேயே. ஜ.ம.கூட்டு முஸ்லிம்களுக்கு வடக்கு கிழக்கிற்கு வெளியே ஒரு அலகை நிறுவ விரும்புகையில், தொண்டமான் ,முஸ்லிம்களுக்கான முஸ்லிம்களாலான சுயாட்சி அமைப்பு வடிவம் ஒன்றை வடக்கு கிழக்கு மாகாணத்தினுள் வழங்கப் பிரேரிக்கின்றார்.

உள்ளூராட்சி முறையைப்பொறுத்தவரை, அவ் ஒழுங்குகள் குறித்து ஜ.ம.கூட்டு மௌனம் சாதிக்கிறது. தொண்டமானுடைய சேவை முஸ்லிம்களைப் பெருவாரியாகக் கொண்ட பிரதேசங்களுக்கான பிரதேசிய சபைகள் ஒரு யூனியன் சபையுள் அடக்கப்படுவதுபற்றி குறிப்பிடும் அதேநேரம், தற்போது நடப்பிலுள்ள முறைமையை தொடர்ந்து பேணுவதுடன் முரண்படுகின்றன. ஜ.ம.கூட்டின் மௌனமும், இத்தகையதொரு நிலையையே எடுக்குமென ஊகிக்க வைக்கிறது. எனவே இங்கும் கூட குறிப்பிடத்தக்களவு ஒற்றுமையை இருசாராரிடமும் காணலாம்.

அடுத்த கவனிப்பிற்குரிய விடயம்; இப்புதிய ஒழுங்கின் அரசியற் சட்ட அடிப்படைபற்றியதாகும். ஜ.ம. கூட்டு ஒற்றையாட்சி முறைமையின் கீழ் ஒரு அரசியற் சட்டச் சீர்திருத்தத்தைப்பற்றி யோசிக்கிறது. பாராளுமன்றத்திற்கு அதியுயர் அதிகாரங்கள் திரும்பவழங்கப்பட வேண்டும், தற்போதைய தேர்தல் முறைமை சீர்திருத்தப்பட வேண்டும், நீதித்துறை சுதந்திரமாக விளங்குதல் வேண்டும் என்பது அதன் விருப்பங்களாகும். தொண்டமானுடைய யோசனைகள், தமிழ் மக்கள் நலன்களைப் பேணும் சட்ட வரையறைகளின் தேவைபற்றி பேசுகிற போதும் அதற்குரிய அரசியற் சட்ட அடிப்படை பற்றி மௌனமாகவே உள்ளது. எப்படியோ இரண்டும் தெளிவாக குறிப்பிடுவது புதிய அரசியல் ஒழுங்கமைப்புக்கான மாற்றம் ஒன்றின் அவசியத்தையே. ஜ.ம.கூட்டு சிறுபாண்மையினரைப் பாதுகாக்கும் அரசியல் சட்டத்தின் சரத்து 29(2) ஐ திரும்ப கொண்டுவர வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது. இது மிகவும் முக்கியமானதாகும்.

காணி தொடர்பான பிரச்சினைக்கு வருவோமானால், அது இன்னொரு முக்கியமான சர்ச்சைகளுக்குரிய விவகாரமாகும். ஜ.ம. கூட்டு குடியேற்றப் பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வருவதையிட்டு ஆர்வமாக இருப்பதாக காணலாம். அரச நிலங்கள் நிலமற்றவர்களுக்கு, அவர்கள் எந்த இனத்தவராயினும் சரி, வழங்கப்பட வேண்டுமெனவும், பல்வேறு இனக் குழுமங்களையும் பிரதிபலிக்கும் விதத்திலான காணி ஆணையாளர் ஒருவர் வேண்டுமெனவும், காணிக் கொள்கைகள், காணிப்பகிர்வு என்பன இவரால் முடிவு செய்யப்பட வேண்டுமெனவும் அது கூறுகிறது. பாரம்பரியமாக அங்கு வாழ்ந்து வருபவர்கள் அப்பகுதிகளில் குடியமர்த்தப் பட வேண்டும். 1971 இலிருந்து நடாத்தப்பட்ட குடியேற்றங்களால் ஏற்பட்ட உள்நாட்டு குழப்பங்களைச் சரிசெய்து பழைய நிலைமைகளை உருவாக்குவதற்கேற்ற முறையில் ஆவன செய்வதற்கு எதிர்காலத்தில் முன்னுரிமையும் வழங்கப்படவேண்டும். இது தொடர்பான தொண்டமானின் யோசனைகளோ மிகவும் விரிவானதாக உள்ளன. முஸ்லிம்களைப் பொறுத்தவரை, அவர்களது முஸ்லிம் பிரதேசிய சபைகளின் யூனியன் பிரதேசியசபைகளுக்குட்பட்ட அனைத்து அரச நிலத்தையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டிருக்க வேண்டும். மாகாண சபைக்கு இப்பிரதேசிய சபைகளுக்குள் அடங்கிய நிலம் எவையாயினும் தேவைப்படும் பட்சத்தில், அவை பிரதேசிய சபையின் அனுசரணையுடனேயே பெற்றுக்கொள்ளப்பட முடியும். யூனியன் பிரதேச சபையினால் பிரதேச சபைகளுக்குட்பட்ட நிலங்கள் இன விகிதாசார அடிப்படையிலேயே பிரித்தொதுக்கப்பட வேண்டும்.

நிலம் சம்பந்தமாகத் தெரிவிக்கையில் அடுத்ததாக தொண்டமானின் யோசனைகள் தெரிவிக்கும் இன்னொரு விடயம் வடக்கு கிழக்கில் எங்காவது வரும் மாகாணத்திற்குட்பட்ட மாகாவலி நிலத்திற்கும் முஸ்லிம்கள் உரித்துடையவராவர் என்பதாகும். நிலவழங்கல் 1986 ஆம் ஆண்டு நகல் யோசனைகளின் படி அமைய வேண்டும். தொண்டமான் முஸ்லிம்பிரிவு உள்ளடக்கிய ஒரு காணி ஆணைக்குழுவையும் எல்லா நிலங்களும் மாகாண சபையின் கட்டுப்பாட்டுள் இருப்பதையும் பிரேரிக்கிறார். அரசாங்கம் மாகாண நில ஆணைக்குழுவை நியமிக்க வேண்டுமெனவும் அது நிலப் பயன்பாடு குறித்த கொள்கைகளை வகுக்குமெனவும் அவர் தெரிவிக்கிறார். எனவே காணி விவகாரத்திலும் இவர்களுக்கிடையில் பெரிய வித்தியாசம் இல்லை. ஒன்று விரிவாகவும் பொதுவாகவும் இருந்தால் மற்றது தெளிவாகவும் விபரங்களைத் தெரிவிப்பதாகவும் உள்ளது.

இப்போது சிறுபான்மையினரின் விருப்பங்களைத் தீர்க்கும் ஒழுங்கை மேற்கொள்வதிலும், அமைதியைக் கொண்டு வருவதிலும் முக்கிய பங்கு வகிக்கும் ஒரு விடயமான சட்டம் ஒழுங்கு பற்றிய விடயத்தைப் பார்க்கலாம். ஜ.ம.கூட்டு பொலிஸ் படைக்கான ஆட்சேர்ப்பு இன விகிதாசாரப்படி அமையவேண்டும் என்கிறது. அவ்வாறே ஆயுதப்படைக்கான ஆட்சேர்ப்பும் என்பது அதன் கருத்து ஆகும். தொண்டமானின் யோசனைகளும் விபரமாக இனவிகிதாசார அடிப்படையில் படையினருக்கான ஆட்சேர்ப்பை வலியுறுத்துகின்றன. மாகாண சபையானது யூனியன் பிரதேச சபையினுள் வரும் சனத்தொகை, நிலஅளவு பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை என்பவற்றினைப் பொறுத்து எத்தனை பொலிஸ் கான்ஸ்டபிள்கள் தேவை எனத் தீர்மானிக்கும். இந்த ஒழுங்குகள் முஸ்

.............> 11

நன்றி - நூலகத்திட்டம்



ஏறாவூர் காத்தான்குடி அழிஞ்சிப்பொத்தானை பொலநறுவை

## முஸ்லிம் படுகொலைகள்

# வட கிழக்கை ஓரினப்படுத்தவா ?

மருதூர் பஷீத்

அண்மையில், மட்டக்களப்பு -பொலநறுவ எல்லையில் அமைந்திருக்கும் நான்கு முஸ்லிம் கிராமங்கள் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்குள்ளாகியுள்ளன. முஸ்லீம்களை இலக்காகக் கொண்டு நடத்தப்பட்ட மிருகத்தனமான இத்தாக்குதலில், குழந்தைகள் பெண்கள், வயோதிபர்கள் உட்பட இருநூறுக்கும் மேற்பட்ட அப்பாவி முஸ்லீம்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். இக்கொடூரச் சம்பவம் முழு இலங்கையிலும் தீவிரமான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது.

அத்தோடு முன் எப்பொழுதும் இல்லாதவாறு, சர்வதேச ரீதியிலும் இத்தாக்குதல் குறிப்பிடத்தக்க உணர்வுகளைத் தோற்றுவித்துள்ளது. பல நாடுகள் விடுதலைப் புலிகளைக் கண்டிக்கவும் அவர்களுக்கு எதிரான நிலைப்பாடுகளை எடுக்கவும் இது காரணமாகியுள்ளது. உதாரணமாக இத்தாக்குதலைக் காரணம் காட்டி, இலங்கை அரசுக்குத், தான் விதித்திருந்த ஆயுத விற்பனைத் தடையை பிரிட்டிஷ் அரசு அகற்றியுள்ளது.

இலங்கை முஸ்லீம்களைப் பொறுத்தவரை இத்தாக்குதல் முக்கியமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. முதன் முதலாக, தெற்கு (வடக்கு), கிழக்கு அடங்கலாக முழு முஸ்லீம்களும் இக்கொலைகளைக் கண்டித்து ''கறுப்பு வெள்ளியை'' அனுஷ்டித்துள்ளார்கள். இராணுவத்தில் முஸ்லீம்கள் பங்கேற்பது பற்றி வெளிப்படையாகவே கோரிக்கை எழுப்புமாறு முஸ்லீம் தலைமைகள் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன. அந்தளவுக்கு இத்தாக்குதல் (வடக்கு), கிழக்கு முஸ்லீம்களிடையே **தமது பாதுகாப்பையும் உரிமைகளையும் எவ்விதம் பேணிக் கொள்வது,** என்பதை முக்கிய விவாதப் பொருளாக ஆக்கியுள்ளது.

தமது மொத்த இருப்பே அச்சுறுத்தலுக்குள்ளாகியிருக்கும் இன்றைய நிலையில் வடக்கு, கிழங்கு, முஸ்லீம்கள் தமது தலைவிதியை நிர்ணயித்துக் கொள்ள வேண்டிய அவசியத்தில் இருக்கிறார்கள். ஒரு சமூகத்தின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் விடயம் என்ற வகையில், வெறும் நம்பிக்கைகளோ, கற்பனைத்தனமான கருத்துக்களோ, அல்லது மேலோட்டமான முடிவுகளோ இங்கு எதையும் சாதிக்கப் போவதில்லை. மாறாக எதார்த்த நில்லைமகளைச் சரியாகவும் தெளிவாகவும் பரிசீலனைக்குட்படுத்துவதன் மூலம்தான் ஒரு சமூகம் தனது எதிர்காலத்தைத் தீர்மானிக்க முயல வேண்டும். இவ்வகையில் வடக்கு -கிழக்கு முஸ்லீம்கள் மீதான புலிகளின் தாக்குதல்களுக்குரிய அடிப்படை நோக்கங்களை முதலில் பரிசீலிப்போம்.

(1)வடக்கில் செயற்படுத்தியதைப் போன்று, கிழக்கிலிருந்தும் முஸ்லீம்களை வெளியேற்றுவதன் மூலம், வடக்கு-கிழக்கை ஓரினப் பிரதேசமாக-தூய தமிழ்ப் பிரதேசமாக-மாற்றியமைப்பதும், இதன்மூலம் வடக்கு-கிழக்கு நிலப்பரப்பின் மீதும், அங்கு வாழும் தமிழ் மக்கள் மீதும் தமது முழுமையான அதிகாரத்தைத் தடையின்றித் திணிக்கவும் விடுதலைப் புலிகளுக்குச் சாத்தியப்படும்.

(2)தமிழர் இயக்கங்களின் ஆயுதப் போராட்ட வரலாறு, கிழக்கைச் சேர்ந்த தமிழ் இளைஞர்களின் துணிவையும், போர்க்குணாம்சத்தையும் பலசந்தர்ப்பங்களில் துல்லியமாக வெளிப்படுத்தியிருக்கின்றது. இத்தகைய பெறுமதிமிக்க இளைஞர்களைத் தமது இயக்கத்தில் தொடர்ச்சியாக உள்வாங்குவதற்கு, கிழக்கு முஸ்லீம்கள் மீதான தாக்குதல்கள் அவசியமாகின்றன. இத்தகைய தாக்குதல்களின் எதிர்விளைவுகளாக, ஆயுதங்களுடன் தொடர்பு கொள்ளக் கூடிய முஸ்லீம் இளைஞர்கள், மற்றும் இராணுவத்தினர் கிழக்கிலுள்ள தமிழ் மக்களை-குறிப்பாகத் தமிழ் இளைஞர்களை பழி வாங்க முனையும் போது அவர்கள் காட்டிற்குள் ஒழிந்து கொள்வதும் படிப்படியே புலிகள் இயக்க உறுப்பினர்களாவதும் நிகழ்கின்றது. அத்தோடு சாதாரண தமிழ் மக்களும் முஸ்லீம் விரோத உணர்வுக்குள்ளாக்கப்படுவதும் அதைப் புலிகள் பயன்படுத்திக் கொள்வதும் சாத்தியமாகின்றது.

(3)கிழக்கு-மற்றும் எல்லைப்புற முஸ்லீம் கிராமங்கள் மீது தொடர்ச்சியாகவும் பாரிய அளவிலும் புலிகள் தாக்குதல்களை நிகழ்த்துவதன் மூலம் அரசு நெருக்கடிக்குள் ஆக்கப்படுகின்றது. இதனால் அரச படைகள் பரவலாகச் சிதறி குறைந்த எண்ணிக்கையில் கிராமங்களைப் பாதுகாக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. இந்நிலையில், படையினர் புலிகளினால் இலகுவில் தாக்கப்படுகின்றனர். அத்தோடு குறிப்பாக நீண்ட எல்லைகளைக் கொண்ட கிராமங்களைப் பாதுகாக்க, அரச துருப்புக்களின் எண்ணிக்கை போதாமலிருப்பதால் வடக்கிலிருந்து துருப்புகள் வரவழைக்கப்படுகின்றன. இதனால் இராணுவ மேலாண்மை பெறும் நோக்குடன் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற முயலும் அரசின் ஒவ்வொரு முயற்சியும் இடைநிறுத்தப்படுகின்றது. அண்மையில் வடக்குப் போர்முனையில் இருந்து ஆறாயிரம் துருப்புக்கள் கிழக்குக்கு வரவழைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(4)இலங்கை அரசுக்கும்-புலிகளுக்கும் இடையே இரகசியப் பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருப்பதாக வெளிவரும் செய்திகளை, கிழக்கு முஸ்லீம்கள் மீதான புலிகளின் அண்மைய தாக்குதல்களுடன் தொடர்புபடுத்திப் பார்க்க முடியும். ஏனெனில், இத்தகைய பேச்சுவார்த்தைகளின் போது சமபலத்தைப் பேண அல்லது தமது பலத்தை உயர்த்திக் கொள்ள ஒவ்வொரு தரப்பும் முயல்கின்றது. முற்றிலும் இராணுவ அமைப்பாகவே தன்னை வெளிப்படுத்திவரும் புலிகள், இராணுவ ரீதியிலான வெற்றிகள் மூலமே தமது பலத்தைப் பேண முற்படுகின்றனர். சிங்கள மக்களைத் தாக்கியழிப்பதன் மூலம் புலிகள் தமது பலத்தைப் பேணக் கூடிய சாத்தியம் இருப்பினும், மறுபுறத்தில் இத்தகைய தாக்குதல்கள் பேச்சுவார்த்தைகளைப் பாதிக்கக் கூடியதாகவும் அமைந்துவிடும். இந்நிலையில், கிழக்கு முஸ்லீம்கள் மீது தொடர்ச்சியாகத் தாக்குதல்களை மேற்கொள்வதன் மூலம், அரசுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகளை அதிகம் பாதிக்காமலும் அதேவேளை தமது இராணுவ மேலாண்மையை பேணிக் கொள்வதும் புலிகளுக்குச் சாத்தியமாகும்.

(5)ஒரு இராணுவ-பாசிச அமைப்பாகத் தம்மை உருவாக்கியுள்ள புலிகள் இயக்கம், தமது உறுப்பினர்கள் மத்தியில் இவ்வித இராணுவ-பாசிச உளவியலைத் **தொடர்ச்சியாகத் தக்கவைப்பதற்கு இத்தகைய தாக்குதல்கள்** அவசியமாகின்றன. ஒரு வன்முறைத் தாக்குதலில் பெறப்படுகின்ற வெற்றியானது, ஒரு இயக்கத்தின் உறுப்பினர்களிடையே ஏற்படுத்தக் கூடிய உளவியல் தாக்கங்கள் இங்கு கவனத்திற்குரியன. தனது நலன்களுக்கும் இலட்சியத்திற்கும் எதிரானவர்களாகக் காட்டப்படும் மாற்று இனத்தை அழிக்கும் செயலினூடாக இத்தகைய இராணுவபாசிச மனோபாவம் வலுவாகக் கட்டமைக்கப்படுகின்றது. ஜேர்மன் நாஸிகள் இதற்கு சிறப்பான முன்னுதாரணம்.

இவ்வாறு விடுதலைப்புலிகள் தற்போது கிழக்கு முஸ்லீம்கள் மீது தாக்குதல்களைத் தீவிரப்படுத்திருப்பதற்காக முன் வைக்கக் கூடிய மேற்கூறிய காரணங்களைக் கவனத்தில் கொள்ளும் போது, எதிர்காலத்தில் இத்தகைய தாக்குதல் **தொடரவும் மேலும் அதிகரிக்கவுமே** செய்யும் என்ற முடிவுக்கு ஒருவர் வரமுடியும். தனக்குச் சாதகமாக அமையக் கூடிய ஒரு நிலையை புலிகள் அடையும் வரை - குறிப்பாக-கிழக்கு முஸ்லீம்களைத் தொடர்ந்தும் தமது தாக்கும் இலக்காகக் கொள்ளவே செய்வார்கள்.

இந்நிலையில் (வடக்கு) கிழக்கு முஸ்லீம்களின் பாதுகாப்பையும் உரிமைகளையும் எவ்விதம் பேணிக் கொள்வது என்று முஸ்லீம்களின் அரசியல் சமூக மட்டங்களில் வாதப்பிரதிவாதங்களுக்குள்ளாகி வரும் பிரச்சினைக்கான தீர்வைக் கண்டுகொள்ள வேண்டியது அவசர விடயமாகின்றது. இந்த சர்ச்சையில் (வடக்கு) கிழக்கு முஸ்லீம்களின் பாதுகாப்பையும் உரிமைகளையும் பேணக்கூடியவர்களாக பின்வரும் பிரிவினரை பல்வேறு தரப்பினரும் முன்வைக்கின்றனர்.

(1) ஆயுதப் படையினர்

(2)மரபு வழி முஸ்லீம் தலைமகளும், அவர்கள் சார்ந்திருக்கும் சிங்களக்கட்சிகளும்

(3)சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ்

(4)இராணுவத்தில் இணையக் கூடிய முஸ்லீம்கள் அல்லது தனிய முஸ்லீம் படைப் பிரிவு

மேற் கூறிய ஒவ்வொரு பிரிவினரும் (வடக்கு) கிழக்கு முஸ்லீம்களின் பாதுகாப்பு மற்றும் உரிமைகளுடன் கொண்டிருக்கும் தொடர்புகளைப் பற்றி சுருக்கமாகப் பரீசீலிப்போம்

### ஆயுதப் படையினர்

பொதுவாக விடுதலை அமைப்புக்களினால் கிழக்கு முஸ்லீம்களின் மீது பல்வேறு சந்தர்ப்பங்களிலும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களை நேரடியாகச் சந்தித்த ஒவ்வொரு முஸ்லீமும் ஆயுதப் படையினர் (வடக்கு) கிழக்கு முஸ்லீம்களைப் பாதுகாக்கக் கூடியவர்கள் அல்ல என்ற முடிவுக்கே இறுதியில் வர முடியும். பொலீஸ் நிலையங்கள் அல்லது இராணுவ முகாம்கள் மிக அருகிலிருந்த இடங்களில் கூட விடுதலை அமைப்புக்களால் முஸ்லீம்கள் தாக்கப்பட்ட போது ஆயுதப்படையினர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் முஸ்லீம்களைப் பாதுகாக்க முன்வரவில்லை என்ற உண்மையை இங்கு வாழும் ஒவ்வொரு முஸ்லீமும் அறிவார். ஆயுதப்படையினர் ஏன் முஸ்லீம்களைப் பாதுகாக்க முன் வரவில்லை என்பதற்குரிய அக, புறக் காரணிகள் என்னவாக இருந்த போதிலும், இன்று வரை எந்தவொரு தாக்குதலின் போதும் அவர்கள் முஸ்லீம்களை பாதுகாக்கவில்லை என்பதுதான் எதார்த்த உண்மை. நிலமை இவ்வாறிருக்க, ஆயுதப்படையினரால் தான் கிழக்கு முஸ்லீம்களை பாதுகாக்க முடியும் என்று இன்னமும் கூறுவதும் அவ்வாறு முஸ்லீம்களை நம்பிக்கை கொள்ளச் செய்ய முனைவதும் வெறும் கையாலாகாத்தனத்தின் விளைவே தவிர வேறில்லை.

மீதி அடுத்த இதழில்



அடக்கத்தின் போது

நன்றி - நூலகத்திட்டம்



**1980**களில் தமிழ் இளைஞர் பேரவை விடுதலை அணி ஆரம்பிக்கப்பட்டது. **இறைகுமாரனும், யோகநாதனுமே** அமைப்பின் முக்கியஸ்தர்களாக விளங்கினர்.

# தேசிய விடுதலைப் போராட்டம்- ஒரு மீளாய்வு நோக்கி...

## மாவட்ட அபிவிருத்திச் சபை

## பேரினவாதத்தால் அள்ளுண்டு போன மண் அணை

அன்னபூரணா

இரண்டாவது சிதைவிற்கு பின் இளைஞர் பேரவையிலிருந்து வெளியேறியவர்கள் பலர் வெவ்வேறு அமைப்புக்களில் சேர்ந்து கொண்டனர். இறைகுமாரனும், யோகநாதனும் மாத்திரம் வேறு சிலருடன் சேர்ந்து **தமிழ் இளைஞர் பேரவை விடுதலை அணி** என்னும் அமைப்பை ஆரம்பித்தனர். உண்மையில் இரண்டாவது சிதைவிற்குப் பின் இவர்கள் இருவரும் தனித்து விடப்பட்டவர்களாகவே தென்பட்டனர். எனினும் சளைக்காது ஓர் அமைப்பை உருவாக்கி அமைப்புப் பணிகளில் ஈடுபட்டனர். அரசியல் வேலைகளில் **கோவைமகேசன், ஈழவேந்தன்** ஆகியோரால் உருவாக்கப்பட்ட **தமிழீழ விடுதலை அணி**யுடன் சேர்ந்து அதிகளவில் ஈடுபட்டனர். அரசியல் நடவடிக்கைகளில் அவர்கள் முக்கியமாக ஈடுபட்ட நடவடிக்கை 1981 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்கு எதிரான பிரசார நடவடிக்கையாகும். இந்த நடவடிக்கைகளை கிராமங்கள் தோறும் கருத்தரங்குகளாக இவர்கள் நடாத்தினர். குப்பிழான், புன்னாலைக்கட்டுவன், உரும்பிராய் போன்ற இடங்களில் இவ்வாறான கருத்தரங்குகள் நடைபெற்றன. இக்கருத்தரங்குகளில் மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் போலித் தன்மைகள், விடுதலைக்கு எதிரான தன்மைகள், அதன் சட்ட ஏற்பாடுகள் என்பவற்றை விளக்கி அதனைப் பகிஷ்கரிக்குமாறு மக்களை கேட்டுக் கொண்டனர். இவர்களின் இப்பிரச்சார இயக்கத்தில் **டாக்டர் தர்மலிங்கம், வரதராஜப்பெருமாள், குமரன், பூலோகசிங்கம்** ஆகியோரும் ஈடுபட்டனர். இறைகுமாரன் இக்கருத்தரங்குகளில் தமிழர்களுக்கு ஏன் தனிநாடு அவசியம் என்பதையே அதிகளவில் வலியுறுத்தினார். தான் எழுதிய **சின்னஞ் சிறு நாடுகளும் தமிழ் ஈழமும்** என்ற நூலை மேற்கோள்காட்டி சிறிய சிறிய பிரதேசங்கள் எல்லாம் தனிநாடாக இயங்கும் போது தமிழீழம் ஏன் தனியாக இயங்க முடியாது என்ற கேள்விகளை எழுப்பினார். **பூலோகசிங்கம்** மாவட்ட அபிவிருத்திச் சபையின் சட்ட ஏற்பாடுகளைச் சுட்டிக் காட்டி போதியளவு அதிகாரங்கள் இல்லாத சபையினை ஏற்பதில் பயனில்லை என்பதை வலியுறுத்தினார். இவர்களின் இப்பிரசாரம் கருத்தரங்கு என்ற வடிவத்திற்கு புறம்பாக சுதந்திரன் பத்திரிகை மூலமும் பரவலாக மேற்கொள்ளப் பட்டது.

இக்காலத்தில் இவர்களுடைய பிரசாரத்தை எதிர்த்து கூட்டணியினர் மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்கு சார்பாக பிரசாரம் செய்ததோடு அதன் தேர்தல்களிலும் பங்குபற்றுவதற்கு தம்மை தயார்படுத்தி வந்தனர்.

**அவர்கள் மாவட்ட அபிவிருத்திச் சபை பற்றி கூறும் போது கல் அணை கட்டா விட்டாலும் மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் மூலம் மண் அணையாவது கட்டலாம் எனப் பிரசாரம் செய்தனர். தம்முடைய பிரசாரத்துக்கு ஆதரவாக மாவட்டசபை சட்ட ஆக்கத்தை பூரணமாக ஏற்றுக்**கொண்ட அரசியல் சட்டத்துறையில் வல்லுனராக கருதப்படுகின்ற நீலன் திருச்செல்வத்தின் கருத்துக்களையே எடுத்துக்காட்டினர். தமிழ் இளைஞர் பேரவை விடுதலை அணியினரின் பிரசாரங்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் பிரசாரத்தை முறியடித்தாலும் கூட மக்கள் தேர்தல்களில் வாக்களிப்பதை தடுப்பதில் வெற்றி கொள்ளவில்லை. கூட்டணியினர் மக்கள் வாக்களிக்காவிட்டால் ஐ.தே.கட்சியினர் அதிகாரங்களை கைப்பற்றி விடுவார்கள் எனப்பிரசாரம் செய்த போது அப்பிரசாரம் மக்கள் மத்தியில் நன்றாக எடுபட்டது.

மாவட்ட அபிவிருத்திச் சபைகளால் எதுவித பயனுமில்லை என்பது மக்களுக்கு தெரிந்தாலும் ஐக்கிய தேசியக் கட்சியினர் தேர்தலில் வெற்றி பெறக்கூடாது என்பதற்காக அவர்கள் தேர்தலில் வாக்களிக்க முன் வந்தனர். அதுவும் தேர்தலின் போது நடைபெற்ற வன்முறையும், கூட்டணியின் நல்லூர் காரியாலயத்தில் ஒரு இளைஞர் கொல்லப் பட்டமையும், யாழ்நூலகம், யோகேஸ்வரனின் இல்லம், கூட்டணிக் காரியாலயம் என்பன எரிக்கப்பட்டமையும், மக்களை வாக்களிப்பில் கலந்து கொள்ளும்படி தூண்டியது. மக்கள் அரசின் மீதான எதிர்ப்பை அரசுக்கு எதிராக வாக்களிப்பதன் மூலம் வெளிக் காட்டினார்கள். அம்பாறை மாவட்டம் தவிர்ந்த வடக்கு, கிழக்கு மாகாணங்களின் எல்லா மாவட்ட அபிவிருத்திச் சபைகளினதும் அதிகாரங்களையும் இத்தேர்தல் மூலம் கூட்டணியினர் கைப்பற்றினார்கள். யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவராக தெரிவு செய்யப்பட்ட முன்னாள் செனட்டர் நடராஜா, செங்கோல் ஏந்தி பதவியை ஏற்றுக் கொண்டார். இவ்வாறு கூட்டணியினர் பதவிகளை ஏற்றாலும் அவர்கள் கட்ட நினைத்த மண்அணை சிங்கள பௌத்த இனவாதத்தால் சிறிது காலத்திலேயே அள்ளுண்டு போனது. அபிவிருத்திச் சபைகள் பெயரளவில் மட்டும் அபிவிருத்திச் சபைகளாக விளங்கின.

மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்கு எதிரான பிரசாரங்களை விட கைது செய்யப்பட்டோரை விடுதலை செய்யுமாறு தொழிற் சங்கங்கள் வெகுஜன அமைப்புகள் நடாத்திய போராட்டங்களிலும் தமிழ் இளைஞர் பேரவை விடுதலை அணியினர் ஈடுபட்டனர். இப்போராட்டங்கள் 1982 களில் அருட் திரு. சிங்கராஜரும் ஏனையோரும் கைது செய்யப்பட்ட போது. தீவிரமாக மேற்கொள்ளப் பட்டது. இது தொடர்பில் யாழ்ப்பாணத்தில் போராட்டங்களும் நடைபெற்றன.

**இவ்வாறு தமிழ் இளைஞர் பேரவை விடுதலை அணி அரசியல் ரீதியாக இயங்கிய காலம், குறுகிய காலமாகவே காணப்பட்டது. வளர்ந்து வந்த ஆயுத இயக்கங்க**ளின் பால் இவர்களும் கவரப்பட்டபடியால் காலப் போக்கில் அதனுடன் சேர்ந்தும் இயங்க ஆரம்பித்தனர். தமிழ் ஈழவிடுதலைப் புலிகளினுடனேயே இவ்வாறு சேர்ந்து இயங்க ஆரம்பித்தனர். இறுதியில் 1982 இல் இயக்க முரண்பாடுகள் காரணமாக PLOTஇயக்கத்தினரால் இறைகுமாரன் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து தமிழ் இளைஞர் பேரவை விடுதலை அணியின் அரசியல் பணி முற்றாக நின்று விட்டது எனலாம்.

**தமிழ் இளைஞர் பேரவையின் முக்கியத்துவம்:**

தமிழ் இளைஞர் பேரவை விடுதலை அணி மிகக் குறுகிய காலம் மட்டும் இயங்கிய அமைப்பாக இருந்த போதும் இருவிடயங்களைப் பொறுத்து தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் முக்கியத்துவம் பெற்ற அமைப்பாக விளங்குகின்றது.

1) கூட்டணி சார்பு இளைஞர் பேரவையில் இருந்து இளம் தலைமுறை தமிழ்த்தேசிய வாதிகள் வெளியேறியமையை அடையாளமிட்டுக் காட்டியமை.

2) மாவட்ட அபிவிருத்திச் சபைக்கு எதிராகப் போராடியமை


முதாலாவது விடயத்தைப் பொறுத்து தமிழ் இளைஞர் பேரவையின் முதலாவது சிதைவிற்கு பின்னர் அவ்அமைப்பு கூட்டணி சார்பு தமிழ்ர் இளைஞர் பேரவையாகவே காணப்பட்டது. அதனை தமிழ் இளைஞர் பேரவை என்ற தனிப் பெயரில் அழைப்பதை விட தமிழர் விடுதலைக் கூட்டணி வாலிபமுன்னணி என்று அழைப்பதுவே கூடியளவுக்கு பொருத்தமானதாக இருக்கும். அது கூட்டணி சார்பு அமைப்பாக இருந்த போதும் கூட்டணியைப் போலல்லாது அதில் தேசிய விடுதலையை விசுவாசமாக நேசித்த சக்திகளும் இருந்தன. இனைகுமாரன், யோகநாதன், சந்தியார், உமாமகேஸ்வரன் போன்றவர்கள் அத்தகைய சக்திகளாவர். ஆரம்பத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியை உண்மையான தேசிய விடுதலை இயக்கம் என்றே அவர்கள் நம்பினர். காலப்போக்கில் அதன் உண்மைச் சொரூபம் வெளிவரவே அமைப்புக்குள் முரண் படத் தொடங்கினர். முரண்டாட்டின் வளர்ச்சிப் போக்கில் தமிழ் இளைஞர் பேரவையை விட்டு வெளியேறி தமிழ் இளைஞர் பேரவை விடுதலை அணியின்ன உருவாக்கினார். இவ்வெளியேற்றத்தினூடாக தமிழர் விடுதலைக் கூட்டணியும் அதன் சார்பு அமைப்பும் உண்மையான தேசிய விடுதலை இயக்கம் அல்ல என்பதை வெளிக்காட்டினர்.

**இரண்டாவது விடயம் அக்கால கட்டத்தைப் பொறுத்த வரை மிக முக்கியமானதாக அமைந்திருந்தது. தமிழர் கூட்டணிக்கு மாற்றாக** தமிழ் இளைஞர் பேரவையின் முதலாவது சிதைவுடன் தோற்றம் பெற்றிருந்த தமிழ் ஈழவிடுதலை இயக்கமும் முற்றாக சிதைவுற்றிருந்த கால கட்டமாக அக்கால கட்டம் அமைந்திருந்தது. அத்தோடு ஆயுத இயக்கங்களும் முழுமையாக அரசியல் வேலைகளை ஆரம்பிரிக்காத கால கட்டமாகவும் அக்கால கட்டம் அமைந்திருந்தது.

இந்நிலையில் தவறான அமைப்பாக இருந்தாலும் தமிழ்த் தேசியத்தை அரசியல் ரீதியில் முன்னெடுத்த பிரதான அமைப்பாக தமிழர் விடுதலைக் கூட்டணியே விளங்கியது. அது விடுகின்ற அரசியல் தவறுகள் தமிழ்த் தேசியப் போராட்டத்தையே பின் தள்ளக் கூடிய அபாயத்தை கொண்டிருந்தது. மாவட்ட அபிவிருத்திச் சபையை ஏற்றுக் கொள்ளுதல் என்ற அதன் முடிவு தமிழ் தேசியப் போராட்டத்தை பின்னிலைக்கு கொண்டு செல்லுகின்ற பிரதான தவறாகவே அமைந்திருந்தது. இச்சந்தர்ப்பத்தில் அதனை எதிர்த்து தமிழ் இளைஞர் பேரவை விடுதலை அணி போராட முன் வந்தமை. தேசியப் போராட்ட வரலாற்றில் முற்போக்கு நடவடிக்கையாகவே அமைந்திருந்தது. இது அக்கால கட்டத்தில் தவிர்க்க முடியாத ஒரு வரலாற்றுத் தேவையாகவும் அமைந்திருந்தது. இதன் மூலம் இவ் அமைப்பு பூரணமாக இல்லாவிட்டாலும் தனது சக்திக்கேற்றளவு வரலாற்றுக் கடமையை நிறைவு செய்துள்ளது, என்றே கூற வேண்டும்.

இவ்விரு விடயங்களையும் விட அரசியல் ரீதியான போராட்டத்தை முன்னெடுப்பதற்கு பிரதான விடயங்களில் உடன் படுகின்ற அரசியல் அமைப்புகள், வெகுஜனஸ்தாபனங்களின் ஐக்கிய முன்னணி ஒன்று அவசியம் என்பதையும் இவ்வமைப்பு எடுத்துக் காட்டியது. சிறையிலிருப்போரை விடுவிப்பது தொடர்பில் இவ் அமைப்பும் இணைந்து நடாத்திய போராட்டங்கள் அதனை தெளிவு படுத்துகின்றன.

## உன் கதவிற்கு வெளியே



நீண்டு கொண்டே போகிற
வெப்பமான இரவின் முனகலில்
பின்புறத்து இலுப்பையில் வௌவால்கள் சடசடக்கும்
தூரத்தே நாயொன்று ஊளையிடும்

காற்றுச் சிணுங்குகிற இவ்விரவு....

அன்பே கத்தரினா
உனது கணவனின் கனமிக்க
கைகளின் பிடியில்
நொறுங்கும் உனதுடல்
வியர்வையுற்ற அவன் உடல்
உன் அனுமதியில்லாமலேயே
உன்னை அழுத்தும் : வருத்தும்

அவன் தனது பேனையால்
தாள்களில் கிறுக்குவது போல,
தனக்குரிய சீப்பால்
தலையை அழுத்தி
வாரிக்கொள்வது போல,
தாடியை மழிக்கிற சவரக்கத்தியை
பதனமாகப் பேணுவதைப் போலவே தான்
உனது இருப்பையும்
நேசிக்கிறான்

பகலில் சமையலறையிலும்
இரவில் படுக்கையறையிலுமாய்
மாற்றமில்லாத
உன் நேரஅட்டவணை
மாற்றப்பட வழி தேடு

உனக்குரிய கதவை நீ திறக்கும் வரைக்கும்
வெளியும் வெளிச்சமும்
உனக்கு வெறுமையையே தரும்

எனின்
வெளியே வா
வெளியைப் புணர்
காற்று உன்னைச் செதுக்கும்
செப்பனிடும்
செயற்படுத்தும்.

கொற்றவை 92.05.12

நன்றி - நூலகத்திட்டம்



# கருத்தடை ஒரு உயிர்க்கொலையா?

அலிச்சா


அண்மையில், ஃபிரான்சிலிருந்து வெளிவரும் சமர் சஞ்சிகையில் எல்லோரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கும் வகையில் கருச்சிதைவு தொடர்பான 'விளக்கம்' ஒன்று பிரசுரமாகியுள்ளது. கருச்சிதைவு சம்பந்தமான தனது கொள்கையை எந்தவிதமான யதார்த்தமான ஆய்வுகளும் இல்லாமல் முடிந்த முடிபாக 'கொலை' என்று முத்திரை குத்தி விளக்கமளித்திருக்கிறது சமர்!

சமர் ஆசிரியர் குழுவிலிருந்து ஒருவரை வெயேற்றியதற்கான தமது விளக்கமாக வெளியிடப்பட்ட சமரின் 'விளக்கவுரை' குழந்தைக் கொலையையும், கருச்சிதைவையும் ஒன்றாகப் போட்டுக் குழப்பியுள்ளது. வர்க்கப் போராட்டமே எல்லாவற்றுக்குமான முடிந்த முடிவு எனக் கூறி, நடைமுறைப்பிரச்சினையை கோட்டை விடுவது சமரின் பிரச்சினை. அதையிட்டு நாம் அக்கறைப்படாவிட்டாலும் கூட கருச்சிதைவு சம்பந்தமான சமரின் கருத்து, பெண்களுடன் தொடர்பானதாக அமைவதால் அது தொடர்பான கருத்துப்பரிமாறல் அவசியமானதாகும்.

இன்று அபிவிருத்தி அடைந்த நாடுகளிலும், அடைந்துவரும் நாடுகளிலும் கருச்சிதைவு என்பது ஒரு பரவலான பிரச்சினையாக இருந்து வருகிறது. இன்று நேற்றல்ல, நவீன விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்புகளுக்கு முன்பாகவே மூலிகைகளாலும், கைமருந்துகளாலும் இன்னும் பலமுறைகளையும் பயன்படுத்தியும் கருச்சிதைவு நடத்தப்பட்டது. இந்த இருபதாம் நூற்றாண்டிலும் கூட மிகப்பரவலாக எங்கும் கருச்சிதைவு ஒரு முக்கியமான பிரச்சினையாக இருக்கின்றதானால் அதன் ஆழம் எவ்வளவு பெரியது என்பது வெளிப்படை. ஒரு வட்டத்துக்குள் கண்ணை மூடி இருந்து கொண்டு ஒரு கருவை ஏதாவது வழிகளின் மூலம் அழிப்பதை மட்டும் சிந்தித்தால் கருச்சிதைவு ஒரு பயங்கரமான விசயமாகவே இருக்கும். அவ்வாறு பார்ப்பது மனித வாழ்வின் நடைமுறைக்கும் இயங்கியலுக்கும் பொருத்தமற்ற கற்பனாவாதமே! உண்மையில் கருச்சிதைவு பற்றி கதைக்கு முன் கருச்சிதைவுக்கான காரணங்கள் என்ன என்று ஆராய்வது மிகவும் முக்கியமானதொன்றாகும்.

சமர் கூறுவதுபோல வெறும் பொருளாதார காரணங்களினால் மட்டுமல்ல, இன்று நிலவுகிற சமுதாய அமைப்புமுறையும் அதன் கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களும் கூட கருச்சிதைவை தூண்டிவிடும் காரணங்களாகும். ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலுள்ள அசமத்துவ நிலையை பேணும் வகையிலேயே சமுதாயம் கட்டப்பட்டுள்ளது. ஒரு குழந்தைக்கு தாய், தந்தை என்று உறவுகள் இருந்தாலும், கரு உருவாகி வளர்ந்து வளமான ஒரு குழந்தையை உருவாக்குதல் என்பதில் பெண்ணே முதன்மைப்படுத்தப்படுகிறாள். 'குழந்தை உருவாகுவதால்' ஏற்படும் பிரச்சினைகள் யாவற்றிற்குமே பெண்ணே முகம் கொடுக்கவேண்டிய நிலைமையே இன்று காணப்படுகிறது. திருமணத்திற்கு முன்பான உறவுகளால் உருவாகும் குழந்தைகளுக்கு நூறுவீதமும் பெண்களையே குற்றம் காண்கிறது சமுதாயம். அந்தக் குழந்தை உருவாக்கத்தில் ஒரு ஆணின் பாத்திரமும் இருப்பதை எல்லோரும் மறந்து விடுகின்றனர். திருமணத்திற்கு முன்னர் உருவாகும் குழந்தைக்கு சிலசமயம் ஆண்கள் எந்த விதமான பொறுப்பையும் எடுக்க முன்வரமாட்டார்கள். அந்தநிலையில் கரு உருவாகிய அன்றிலிருந்து குழந்தைப் பிறப்புவரை பெண்ணே பொறுப்பானவளாக இருக்கிறாள். அந்தப்பெண் எந்த வர்க்கத்தில் வாழ்கிறாள் என்பதைப் பொறுத்து பிரச்சினைகளின் அளவு வேறுபடலாம். ஆனால் எதிர்நோக்கும் சமூக எதிர்விளைவுகள் வேறுபடுவதில்லை. உதாரணமாக எனது கிராமத்தில் நடந்த ஒரு சம்பவத்தை சொல்வது பொருத்தமாக இருக்குமென நினைக்கிறேன். பதினாறு வயதுப்பெண் எப்படியோ குழந்தை உருவாகிவிட்டது,வாய்திறக்க உரிமையில்லாத நிலை தாய் தந்தை சகோதரர்களின் கொடுமைக்கு அஞ்சி விசயத்தை மறைத்து விட்டாள். குழந்தைக்குப் பொறுப்பானவன் வெளிநாட்டில்.



சொல்வதற்கு யாருமில்லை. இரண்டுவழிகள்:

1) தற்கொலை

2) விசயத்தை சொல்லி சித்திரவதைப்படுவது.....

இறுதியாக விசயத்தை சொல்லி விட்டால். தாய்,தந்தை,சகோதரன் அடி, உதை சித்திரவதை மூலம் குழந்தை இறந்தது. சமயநம்பிக்கை உள்ள உறவினர் குழந்தை இறப்பை பெரிதுபடுத்தவே இல்லை. எல்லாவற்றுக்கும் மேலாக சமூகத்தில் தமது கௌரவத்தை, மதிப்பைக் காப்பாற்ற குழந்தை அழிந்ததை;மகள் அழிவதைக் கூட வரவேற்றனர். திருமணத்திற்கு முன்னர் குழந்தை உருவாகினால் பெண்ணுக்கு தற்கொலையே முடிந்த முடிபாகவும் நாகரீகமானதாகவுமே சமூகத்தில் கருதப்படுகிறது.

பெண்ணை ஆட்டக்காரி எனவும் அடக்கமற்றவள் எனவும் கூறி அவளை இரண்டாம் தரமாக கருதுகிற இந்த மனப்பான்மை இருக்கும் வரை கருச்சிதைவு எப்படித் தடுக்கப்படமுடியும்? பல பெண்களுடனான ஆண்களின் உறவை ஆண்களின் ஆளுமையாக நினைக்கும் சமுதாயம் பெண்களின் உறவுகளை மறுக்கிறது. பெண்களின் இனவிருத்தி இயல்பினாலேயே பெண் இரண்டாந்தரமாக கருதப்படுகிறாள் என்ற தீவிரவாத பெண்நிலையாளர்களின் கூற்றை சமூகம் எவ்வாறு ஜீரணிக்கப் போகிறது என்பது இன்று ஒரு சவாலாக உள்ளது.

திருமணத்திற்கு பின்னர் ஏற்படுத்தப்படும் கருச்சிதைவுகளுக்கு மிக முக்கியமான காரணங்களில் ஒன்று பாலியல் தொடர்பான கல்வி அறிவு இல்லாமையே. முக்கியமாக பெண்கள் பாலியல் தொடர்பாக கதைப்பதே தரக்குறைவு, வெட்கம் என்றும் அதைப்பற்றிய அறிவு ஆண்களுக்கு இருந்தால் போதும் என்ற உணர்வுமே காணப்படுகிறது. குழந்தை தேவை என்று உணராத வேளைகளில் எதிர்பாராத விதத்தில் குழந்தை உருவாவது பாலியல் அறிவின் பற்றாக்குறையினாலேயே. அதைவிடவும் கருத்தடை மாத்திரைகளின் நம்பகமற்ற தன்மையும், அதனால் ஏற்படும் பக்கவிளைவுகளும் அவற்றை உபயோகிக்குமளவு திறமையின்மையும் வேண்டாதபோது ஒரு குழந்தையின் உருவாக்கத்திற்கும் கருச்சிதைப்புக்கும் காரணமாக இருக்கின்றன.

வெளிநாடுகளில் வேலை வாய்ப்பை எதிர்பார்த்து பெருந்தொகையான ஆண்கள் கலியாணம் முடிந்து ஒரு மாதத்தில் திரும்பவும் சென்று விடுவார்கள். ஆண்-பெண் பாலியல் உறவுக்கு ஏற்படுத்தப்பட்ட சட்டரீதியான அங்கீகாரமான கலியாண உறவினால் கூட பெண்களுக்கு ஆண்களின் உறவு அற்றுப் போகிறது. இந்நிலையில் பெண்களின் இரகசிய உறவுகள் வளர்வதற்கான சூழல் உருவாக்கப்படுகிறது. இரகசிய உறவினால் உருவாகும் பிள்ளையை சமூகம் ஒரு போதும் அங்கீகரிப்பதில்லை, அங்கீகரிக்க போவதுமில்லை. இந்நிலையில் தனித்து வாழும் வாழும் பெண்கள் எப்படி வாழவேண்டும் என்று சமூகம் எதிர்பார்க்கிறது?

இதற்கு விடை தேட முனைகையில் மீண்டும் அடிமை வாழ்வையும், பொறுமை, அடக்கம், அச்சம், மடம், நாணத்தையும் பெண்களின் இரண்டாம்தர நிலையையும் வலியுறுத்தி அடக்கு முறைக்குள் அல்லது ஆணாதிக்க சமூகத்துள் பெண்ணை பேணி வைத்திருக்கும்படியே கருத்துக்கள் கூறப்படும். ஆனால் வெளிநாடு செல்லும் ஆண்களின் கற்பு பற்றியோ தூய்மை பற்றியோ கற்பனை கூட செய்ய சமூகம் தயாராக இல்லை. இங்கும் பெண்களின் இனவிருத்தி இயல்பே பெண்களை அடிமைப்படுத்துகிறது.

இதுமட்டுமன்றி, குடும்பத்தின் பொருளாதார நிலையும் கூட குழந்தை பெறுவதை தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. உருவாகும் குழந்தையை வளமான எச்சமாக உருவாக்கமுடியாத சூழலில் கருச்சிதைவு தான் ஒரே வழியாக கையாளப்படுகிறது. கணவன், மனைவி இருவருமே வேலைக்கு சென்ற போதிலும், கடினமாக நாள் முழுவதும் உழைத்த போதிலும் பொருளாதர ரீதியில் குழந்தை பெறுவது சாத்தியமற்தாக இருப்பதுண்டு. குழந்தையை உருவாக்கி விட்டு பட்டினியாலும் பசியாலும் சாகடிப்பதை விட கருவில் சிதைப்பதை விளங்கி கொள்வது கடினமல்ல. மார்க்ஸினாலேயே தனது மகன் எட்காரை வறுமையிலிருந்து காப்பாற்ற முடியவில்லை. ஜென்னியின், முலையில் பாலுக்கு பதிலாக இரத்தம் கசிந்தபோது உள்ள வேதனையை விட, பிறந்த பின் உணவூட்ட முடியாமல் சாகடிக்கச் செய்த துன்பத்தை விட கலங்களால் உருவாகிக் கொண்டிருக்கும் சிசுவை கருச்சிதைவு செய்வது பாரதூரமானதாக கருதப்படமுடியுமா?

எங்கெங்கெல்லாம் போர் நடக்கின்றதோ அங்கெல்லாம் பெண்களை பலாத்காரம் செய்தும் ஒரு சம்பிரதாயமாகவே நடந்து வருகின்றது. எந்தவிதமான உணர்வுகளும் இல்லாமல் அந்நியன் ஒருவனின் பலாத்காரத்தினால் உருவாக்கப்படும் குழந்தையை பேணி வளர்ப்பதற்கும், அந்த குழந்தை உருவாகிய பின் ஏற்படும் சகல பிரச்சினைகளுக்கும் பெண் எந்த வித்தில் பொறுப்பாக இருக்க முடியும்? அந்த நிலையில் தன்னைக் காப்பாற்றுவதற்கு பெண்ணுக்கு என்ன மாற்றுவகைகள் காணப்படுகின்றன? கருச்சிதைவை விட இலகுவானதும் மலிவானதுமான ஏதாவது முறைகள் காணப்படுகின்றனவா? யாழ்நகரில் அந்திய இராணுவப் படை எடுப்பின் போது ஒவ்வொரு கிராமங்களையும் திடீர் திடீரென சுற்றி வளைத்து தேடுதல் வேட்டை நடத்திய போது எத்தனை பெண்கள் பலாத்காரம் செய்யப்பட்டனர்? எந்தப் பெண்ணாவது தனக்கு குழந்தை வேணுமென்று இராணுவத்துடன் உடலுறவு கொண்டிருப்பாளா? அல்லது இந்தப் பலாத்காரத்தின் விளைவுகளை அவளால் தடுத்திருக்க முடியுமா?

கணவன் கிளிநொச்சிக்குச் சென்று தட்டுப்பாடான பொருட்களை வாங்கி வருவதும் மனைவி அதை கிராமத்தில் விற்பதுமாக ஒரு குடும்பம் நான்கு பிள்ளைகளையும் பராமரித்து வந்தது. கணவனில்லாத ஒரு மழைக்கால காலையில் திடீரென தேடுதல் நடத்திய இராணுவத்தினர் பிள்ளைகளுடன் தனிமையில் இருந்த பெண்ணை பலாத்காரம் செய்தனர். எழுந்து நடக்க முடியாத அப்பெண் பய உணர்வினால் அயலவர்க்கு சொல்ல கிராமம் முழுவதும் கதை பரவியது. கிராமத்தில் தலை நிமிர முடியாத அப் பெண் கிராமத்தை விட்டு வெளியேறினாள். ஆறுமாதங்களின் பின் கணவனால் கைவிடப்பட்டு அந்தப்பெண் நான்கு குழந்தைகளுடனும் கிராமத்திற்கு மறுபடியும் வந்தாள். எந்த விதமான பொருளாதாரப் பின்னணியும் இல்லாமல் வாழ்வதற்கு வழி தெரியாத அப்பெண் செய்த குற்றமாகவே இந்தப்பலாத்காரம் சமூகத்தால் கருதப்பட்டது.இந்நிலையில் அவள் இராணுவத்தால் உருவாகிய குழந்தையை கருச்சிதைவு செய்திருந்தாள். பலாத்காரம் செய்தவனின் முகம் கூட தெரியாமல் ஒரு பிள்ளையை,- கருப்பையை உடலில் சுமந்து வைத்திருப்பதற்காகவே - பெற்று விடவேண்டும் என்று எதிர்பார்ப்பது எந்த விதத்தில் நியாயம்? இப்படி இலட்சக்கணக்கில் பலாத்காரம் செய்யப்பட்ட உலகெங்கிலும் உள்ள பெண்களுக்கு மாற்று வழி என்ன?

வேலை வாய்ப்புகளை தேடி சிங்கப்பூர், மத்தியகிழக்கு போன்ற நாடுகளுக்கு செல்லும் பெண்களின் நிலையும் இதே போன்றதே! வீட்டுப்பணிப் பெண் வேலைக்கு செல்கையில் ஆளுமையோ அதிகாரமோ அற்ற நிலையில் அவளுக்கு குழந்தை உருவாகும் போது அதைத் தடுப்பதற்க்கு அவளுக்கு என்ன வழிகள் உள்ளன. சமீப கால ஆய்வுகளில் வெளிநாடுகளில் வேலைக்கு செல்லும் பெண்கள் நிரந்தர கருத்தடை செய்து விட்டு போவதாக தெரிவிக்கின்றன. கருத்தடை செய்யாத பட்சத்தில் அதன் பின் விளைவுகளை எதிர்நோக்குவதை விட கருத்தடை செய்து விட்டு செல்வதை கணவனும், உறவினர்களும் விரும்புவதாக பல பெண்கள் கூறுகின்றனர்.

பெண்களின் உடல்நிலையைப் பொறுத்தும் கருச்சிதைவுகள் நடைபெறுகின்றன. கருத்தரிப்புக் காலங்களில் உருவாகும் சில நோய்கள் குழந்தைக்கு ஆபத்தாக அமைவதால் வைத்தியர்களே கருச்சிதைவை செய்வதற்கு ஆலோசனை கூறுவர். எயிட்ஸ் நோயாளிக்கு பிறக்கும் குழந்தையும், ஜேர்மன் சின்னமுத்து உருவாகிய தாயின் குழந்தையையும் அழிக்க முனையும் சமுதாயம் பெண்களின் சொந்தப் பிரச்சினைகளால் - அது எவ்வளவு மோசமானதாக இருப்பினும் - குழந்தையை தவிர்க்க முனையும் போது மட்டும் ஏன் கொலை என்று முத்திரை குத்திவிடுகிறது. இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகளில் கருச்சிதைவு செய்வதை சட்ட விரோதமாக கருதுகின்ற போதிலும், இந்நாடுகளிலேயே மிகக்கூடிய அளவில் கருச்சிதைவுக்கான காரணிகளும் வளர்ந்துள்ளன என்பது ஆச்சரியத்திற்குரிய ஒன்றாகும் குழந்தை பெறப்போகும் தாயின் உடல் நிலை மட்டுமல்ல தாயின் மனோநிலையும் முக்கியமானது. தாயின் மனோநிலையின் தன்மையை பொறுத்து சிசுவின் அனைத்து வளர்ச்சிகளும் பாதிக்கப்படலாம். (மூளை, உடலுறுப்புகள்) என்று வைத்திய நிபுணர்கள் கூறுகின்றனர். எமது பெண்கள் மனோரீதியாக பாதிப்படைவதற்கு இந்த சமூகமே பெரிய காரணியாக அமைந்து விடுகிறது. தனது குழந்தையை பெறுவதா, அல்லது கருச்சிதைவை செய்வதா மனோநிலையை அதிகளவில் பாதிக்கும் என்பதைக் கருத்திற் கொண்டு ஒரு தாயே அது தொடர்பான முடிவை எடுக்க முடியும். இதனால் தான் பிரித்தானியாவில் 1967 ல் கொண்டு வரப்பட்ட கருச்சிதைவு சட்டம் 27 வாரங்கள் வரைக்கும் கருச்சிதைவை செய்வதற்கு தாயினுடையதும் பிறக்கப் போகும் குழந்தையினதும் உடல்நிலை,

..............> 11

நன்றி - நூலகத்திட்டம்



# ,, விவரணப் படத்தையும் கதைப்படத்தையும் வேறுபடுத்த இயலாது ,, - லெஸ்டர்

லண்டனில் ஒரு பத்திரிகையாளனாக அஞ்ஞாதவாசம் செய்து கொண்டிருந்த என்னை இலங்கை திரும்பும்படி தூண்டியவர் புகழ்பெற்ற ஆங்கில விவரணப் படத்தயாரிப்பாளர் றால்ஃப்கீன்.

உண்மையில் அது ஒரு சுவாரசியமான சம்பவம்: அப்போது இடையிடை லண்டனிலேயே சிறு சிறு திரைப்படங்களைத் தயாரித்து வந்தேன்; நிறையப் பணம் செலவாயிற்று. உழைக்கும் பணத்தை அப்படியே திரைப்படத் தயாரிப்புக்குள் கொட்டித் தீர்த்துக் கொண்டிருந்தேன். ஏதோ ஒரு வகையில் என்னுடைய படங்களுக்கு அப்போதும் விருதுகள் கிடைத்துக் கொண்டிருந்தன. ஒரு முறை விருதுத் தெரிவுக் குழுவுக்கு முக்கிய உறுப்பினராக இருந்த **றால்ஃப் கீன்** என்னைச் சந்திக்க நேர்ந்தது. இலங்கையிலிருந்தல்லவா நீங்கள் படம் எடுக்க வேண்டும்? என்று ஆச்சரியத்துடன் என்னைக் கேட்ட றால்ஃப், தன்னுடன் இலங்கை வரும்படியும் எனக்கு அழைப்பு விடுத்தார். இலங்கை அரச திரைப்படப்பிரிவின் முதன்மைத் தயாரிப்பாளராக றால்ஃப் இலங்கை செல்ல இருப்பது அப்போதுதான் எனக்குத் தெரிந்தது. பிறகென்ன?

ஏதோ ஒரு விசித்திரமான வழியில் நான் இலங்கை திரும்புவதாக முடிவெடுக்க நேர்ந்தது.

நாற்பது வருடகால வளமான திரையுலக அனுபவங்களைத் தன்னுள் சுமந்து கொண்டு ஆனால் அமைதியாகவும் ஆர்ப்பாட்டமில்லாமலும் மெல்லப் பேசும் லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸின் வார்த்தைகள் இவை.

இரண்டாவது தென்னாசியக் குறுந்திரைப்படங்கள் மற்றும் விவரணப்படங்களின் விழாவையொட்டி சரிநிகருக்குப் பேட்டியளிக்க இசைந்தார் லெஸ்டர். திரைப்படங்களைப் பற்றிப் பொதுவாகவும் விவரணப் படங்களைப் பற்றிக் குறிப்பாகவும் இந்த நேர்காணலில் லெஸ்டர் மனந்திறந்து பேசினார்.

''றால்ஃப் கீனுடன் பணிபுரிய ஆரம்பிப்பதற்கு முன்னால் விவரணப் படத்துறையில் எனக்கு எவ்வகையான அனுபவமும் இருந்ததில்லை. விவரணப் படம் பற்றிய என்னுடைய ஞானம் அனைத்தும் றால்ஃபிடமிருந்து நான் பெற்றுக் கொண்டதுதான்'' என்று தன்னடக்கத்துடன் சொல்கிறார் லெஸ்டர். விவரணப் படங்களின் சாயல் லெஸ்டரின் ஆரம்பப் படங்களில் இருப்பதாக திரைப்பட விமர்சகர்கள் சொல்வார்கள். குறிப்பாக லெஸ்ரருடைய முதலாவதும் புதுமைச் சிறப்பு மிக்கதுமான **''ரேக்காவ'' (விதியின் வழி)** திரைப்படத்தில் இந்த அம்சத்தை காணலாம்.

''ரேக்காவ படத்தில் றால்ஃப் கீனிடம் இருந்து நான் பெற்றுக் கொண்ட அறிவு துலாம்பரமாகவே தெரிகிறது என்று சொல்ல வேண்டும். 'ரேக்காவ' திரையிடப்பட்டபோது படு தோல்வியைத் தழுவிற்று. அன்றைய இலங்கை மக்களுக்கு ரேக்காவ ஒட்டு மொத்தமாகவே பிடிக்கவில்லை. ஏனென்றால் 'ரேக்காவ' சாதாரண சிங்கள மக்களைப் பற்றிய படம். அவர்களுடைய அன்றாட, மிகச் சாதாரணமான வாழ்க்கையையே அவர்கள் திரையில் காண நேர்ந்தது. அது அவர்களுக்கு உடன்பாடானதாக இருக்கவில்லை. எங்களுக்குத் தெரிந்த விஷயங்களைத் திரையில் பார்ப்பதற்கு ஏன் நாங்கள் பணம் கொடுக்க வேண்டும் என்று அவர்கள் யோசித்தார்கள் போல. அவர்களுக்குத் திரையில் தேவைப்பட்டதெல்லாம் கனவுகளும் கற்பனைகளும்தான். என்னால் அவற்றை வழங்க முடியவில்லை.

ஒரு மெல்லிய புன்னகையுடன் சொல்கிறார் லெஸ்டர்.

''விவரணப் படங்களை இன்று பற்றியுள்ள முக்கியமான சிக்கல். அவற்றை இலகுவில் வரைவிலக்கணம் செய்ய முடியாதிருப்பதே. ஒரு விவரணப் படத்தையும் கதைசார்ந்த படத்தையும் பிரிக்கிற எல்லைக்கோடு எதுவென இப்போது தெரியாது. இந்தப் பிரச்சினை முதலாவது விவரணத் திரைப்படங்களின் விழா ஜப்பானில் நடந்தபோது இருந்தது. நானுட்படப் பலர் இது பற்றி அன்றிருந்தே விவாதித்து வந்திருக்கிறோம்.

ஒரு யதார்த்த நிகழ்வை படைப்பு/கலா பூர்வமாகச் சித்தரிப்பதே விவரணப்படம்'' என்று வரையறை செய்தோமானால் இங்கும் பிரச்சினையுள்ளது. படைப்பு பூர்வமாக அல்லது கலாபூர்வமாகச் சித்திரிக்க முனைகையில் ஓரளவாவது 'கலை' சேர்கிறது. அதாவது புனைவும் இணைகிறது. எனவே வெறுமனே விவரணம் அல்ல.

பழைய அர்த்தத்தில் விவரணப்படம் என்பது ஒரு சம்பவத்தை 'தான் பட்டுக்கொள்ளாதவாறு' கமெரா பார்ப்பது. அவ்வளவுதான். பஸில் றைற் அவர்களின் இலங்கையின் கீதம் என்ற படத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அதிலே எவ்வகையான புனைவும் இல்லை. தான் இலங்கையிற் பார்த்தவற்றை அவர் கெமரா ஊடாக பதிவு செய்தார். ஆனால் பிறகு என்ன நடக்கிறது. தான் பதிவு செய்தவற்றை அவர் ஒழுங்கு படுத்தித் தருகிறபோது ஒரு கலைத்துவமான புனைவு ஏற்பட்டு விடுகிறது.

எனவேதான் நான் சொல்கிறேன் இன்றைக்கு விவரணப் படத்தையும் கதைசார்ந்த படத்தையும் ஒரு அறிவார்ந்த முறையில் வேறுபடுத்த இயலாது. சில சமயங்களில் விவரணப்படங்களை எடுப்பவர்கள் கதை சார்ந்த அம்சங்களைப் பாவிக்கிறார்கள். அதேநேரம் கதைப்படங்களை எடுப்பவர்கள் விவரண பட அம்சங்களைப் பாவிக்கிறார்கள்.

''சலாம் பொம்பே'' ஒரு விவரணப் படம் என்று ஒருவர் வாதிடக்கூடும். விவரணப்படத்தின் அம்சங்களை அது பாவிக்கிறது என்பது உண்மைதான் எனினும் அது குறித்த சில அனுபவங்களை மீள நிகழ்த்திக் காட்டுகிறது. தெருச் சிறுவர்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டவர்களையே படத்தில் பாவித்திருந்தாலும் அவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டிருந்தது. திரையில் பார்க்கும்போது 'சலாம் பொம்பே' விவரணப்படமாகத் தொழிற்படுவதில்லை.

இன்று கதைப்படங்களில் அதிகளவில் உண்மையும் விவரணப் படங்களில் அதிகளவு புனைவும் இருப்பதற்கான சாத்தியங்கள் நிறைய உள்ளன.


மாறும் நிலைமைகளை நாங்கள் கணக்கிலெடுக்க வேண்டும்.

''கம்பெரலிய'' (கிராமப் பிறழ்வு), நிதானய ஆகிய புகழ்பெற்ற படங்களைப்பற்றி லெஸ்டர் என்ன கருதுகிறார்?

''இந்த இரண்டு படங்களிலுமே முற்று முழுதாக விவரணச் சாயலில் இருந்து நான் விலகிவிட்டேன். யதார்த்தத்திற்கும் ஒருவர் ஆசைப்படும் புனைவிற்கும் இடையேயான 'இழுபறி' நிலை என்னுடைய விருப்பமான ஒரு மூலப் பொருள்! பிரதானமாக யதார்த்தத்தில் வேர் கொண்டிருந்தாலும் என்னுடைய படங்கள் அவ்வப்போது புனைவுலகத்திலும் சஞ்சரிக்கத்தான் செய்கின்றன. அது இன்னொரு உலகம். அதிலிருந்தும் நாம் தப்ப முடியாது. மனிதர்கள் எப்போதும் ஒரே உலகத்தில் வாழ்வதில்லை. அவர்களுக்கென்று பல உலகங்கள் இருக்க முடியும்..'

கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலான தனது சினிமா உலக சாதனைகளால் உலகத்திரைப்பட வரலாற்றில் ஒரு அசைக்க முடியாத முத்திரையைப் பதித்துக் கொண்டவர் லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ். அண்மையில் 'International film guide' உலகின் தலை சிறந்த ஐந்து திரைப்படத் தயாரிப்பாளர்களில் ஒருவராக இவரைக் குறிப்பிட்டுள்ளது. ஆசியாவில் ஜப்பானிய அக்கிர குருசோவாமற்றும் இந்திய சத்யஜித்ரே ஆகியோருடைய படைப்புகளை மட்டுமே இவருடைய படைப்புகளுடன் ஒப்பிட முடியும் என்று அது கூறுகிறது.






லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ்

இலங்கையில் மிகக் குறைந்தளவு வசதிகளுடன் அவர் தயாரித்த முதல் படம் **ரேக்காவ** என்பதாகும்.

'இலங்கை சினிமாவில் இலங்கையினது அடையாளத்தைக் காட்ட வேண்டிய தேவை இருக்கிறது. இதற்காக நாம் கிராமங்களுக்கு செல்ல வேண்டும்' என்று அவர் கூறினார்.

மாட்டின் விக்ரமசிங்காவின் **கம்பெரலிய** இவரது சிறப்பான படைப்பாற்றலுக்கு ஒரு உதாரணமாகும். 'சில காட்சிகள் நாவலை விட அற்புதமாக படத்தில் அமைந்துள்ளன' என்று விக்ரமசிங்காவே பாராட்டியுள்ளார்.

இவரது 'கலியுக','யுகாந்தய' ஆகியனவும் சிலாகிக்கப்படுகின்ற ஏனைய படங்களாகும்.



நிதானயவிலிருந்து

அனுஷா

நன்றி - நூலகத்திட்டம்



## தமிழர்களுக்கு...

கிறார்கள். பொலிஸ் நிலையங்க ளில் வீட்டு உரிமையாளர்களான சிங்களவர்களுக்கு பொலிஸாரால் புத்திமதியும் கூறப்படுகிறது. ''தமி ழர்களை ஏன் வீடுகளுக்குள் வைத் திருக்கிறீர்கள். அவர்களை வெளி யால் துரத்தி விடுங்கள்''என்று. சரி நிகருக்கு வந்த ஒருவர், ரஞ்சன் விஜயரத்தினா கொல்லப்பட்டதிலி ருந்து இதுவரை பம்பலப்பிட்டி, கிருலப்பனை, வெள்ளவத்தை, கொள்ளுப்பிட்டி, தெகிவளை, கல் கிசை ஆகிய பொலிஸ் நிலையங்க ளில் ஆகக்குறைந்தது நான்கு நாட் கள் தங்கி வாழ்ந்திருக்கிறார். தெகி வளை பொலிஸ் நிலையம் பரவா யில்லை என்பது அவர் கருத்து. அதாவது சிறுநீர் கழிக்கக் கொஞ் சம் வசதியுண்டு.

தற்போது சாதாரண சிங்கள மக்க ளில் சிலரும் தமிழரை அடையா ளம் காண்பதில் ஈடுபட்டுள்ளனர்.

'வெலாவ கீயத ?' (நேரம் என்ன?) என்பார்கள். தடுமாறுவதிலிருந்து தமிழரை இனம் காண்பார்கள்.

இந்தக் கைதுகளின் போது வழமை யாக இளைஞர்கள் கொண்டு போகப்படுவது தான் வழக்கம். இம்முறை இளம் பெண்களும், வயோதிபர்களும் கூட விதிவிலக் காகவில்லை. கைது செய்யப்பட்ட 2500க்கு மேற்பட்டோரில் நூற் றுக்கு மேற்பட்டோர்பெண்கள். அறுபதுக்கு மேற்பட்டோர் அறு பது வயதைத் தாண்டியவர்கள்.

இன்னுமொரு முக்கியமான விட யம்; வழமையாக இவ்வாறான சம் பவங்களின் போது கொழும்பில் தமிழர்கள் அதிகமாக வாழும் பகு திகளில் தான் கைது நிகழ்வது வழக் கம். இம்முறையோ நகர்ப்புறத் திற்கு அப்பாலும் தமிழர்கள் ஐதாக வாழும் பகுதிகளிலும், மலையகப் பகுதிகளிலும் விரிவுபடுத்தப்பட்டி ருக்கிறது.

தமிழரென அடையாளங் காட்டிய தால் இந்தக்கைது நடவடிக்கைகள் சரிநிகர் சிவகுமாரையோ, மேர்ஜ் செயலாளர் பாலகிருஷ்ண னையோ கூட விட்டு வைக்க வில்லை.

சிவகுமார் இரண்டு நாட்களை தெகிவளை பொலிஸ் நிலையத்தி லும், பாலகிருஷ்ணன் கண்டி பொலிஸ். நிலையத்தில் ஐந்தோ ஆறு நாட்களையும் கழிக்க வேண் டியதாயிற்று.

இந்த எல்லாக் கைதுகளிலும் துல்லி யமாகத் தெரிந்தது பொலிஸாருக் குத் தேவையானவை, பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட சீட்டோ, அடையாள அட்டை யோ, வேலை செய்வது, படிப்பது, அல்லது கொழும்பில் நிற்பதற்கான தகுந்த ஆதாரங்களோ அல்ல. நீ தமிழனா? என்பது மட்டுமே.

## அதைச் செய்ய...

ரசப்படுத்தி விடுவதன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் உரிமைக்கு சமாதி கட்டி விடலாம் என்று அரசு நம்பியது. மாகாணசபையை கலைத்துதுடன், மாற்று அரசியல் அதிகார முறைகள் எதையும் பற் றிய அக்கறை இல்லாமல் புலிகளை சமரசப்படுத்த முயன்றது. உண்மை யில் தமிழ் மக்களின் அரசியல் உரி மைகளையும், இன அடையாளத் தையும் மதிக்கும் அரசாக இது இருந்திருந்தால், புலிகளுடனான பேச்சு வார்த்தையைப் பகிரங்க மாக நடாத்தியிருக்கும். தமிழ்மக்க ளின் நீண்ட நாள் பிரச்சினைக்குத் தான் என்ன தீர்வை முன்வைக்கி றேன் என்பதை வெளிப்படையாக தெரிவித்திருக்கும்.

ஆக, புலிகளை கைக்குள் போட் டுக் கொண்டு தமிழ் மக்களுக்கு முழங்கையைக் காட்ட நினைத்த அரசுக்கு புலிகள் திரும்பவும் யுத் தத்தைத் தொடங்கியது ஏமாற்றம் தருவதாகவும், துரோகமாகவும் படலாம். ஆனுல் தமிழ் மக்களைப் பொறுத்தவரை, தனது நடைமுறை மூலம் யுத்தத்துக்கான சூழலை எப் போதுமே கொண்டிருக்கின்ற இந்த அரசின் கீழ் புலிகளுடனான யுத்த வெடிப்பு ஒன்றும் ஆச்சரியம் தருவ தாக இல்லை. அப்படியாருக்கா வது ஆச்சரியம் ஏற்பட்டால், அது புலிகள் குறித்த அவர்களது அபிப் பிராயத்தாலாக இருக்குமேயன்றி யுத்த சூழல் இல்லை என்பதாலான தாக இருக்காது!

அண்மையில் 'ஜனநாயக வழிக் கு' திரும்பியவர்கள் முன்வைத்த நாலு அம்சக் கோரிக்கையையும் புறங்கையால் தட்டிவிட்டு விட் டது அரசு என்றுல் அதன் நோக்கம் என்னவென்பதை வெளிப்படை யாகக் கூறத்தேவையில்லை.

அரசின் யுத்தமும் சரி, அதன் அரசியல் தீர்வும் சரி எல்லாமே தமிழ்மக்களை ஒன்றுமில்லாமல் ஆக்குவதை நோக்கமாக கொண் டவை என்பதில் யாரும் சந்தேகப்ப டத் தேவையில்லை!

எனவே யுத்தத்தை நிறுத்து என்று அரசிடம் கோருவது போல் புலிகளிடமும் கோருவது நியாய மானதாக இருக்க முடியுமா? புலி கள் ஆயுதங்களைக் கீழே போட்டு விட்டு 'ஜனநாயக' வழிக்குத் திரும்பி விட்டார்கள் என்று ஒரு பேச்சுக்கு வைத்துக் கொள்வோம். அதற்குப்பிறகு அரசு எப்படி நடந்து கொள்ளும் என்பதற்கு என்ன உத்தரவாதம்? கடந்த நாற்ப தாண்டுகளாக செய்யாததனை, இலங்கை-இந்திய ஒப்பந்தத்தால் செய்ய முடியாததை மிகமிக குறைந்த பட்ச அளவிலான நாலு அம்சக் கோரிக்கையால் கூட சாதிக்க முடியாததை புலிகள் ஆயுதத்தை கீழே போடுவதால் மட்டும் சாதித்து' விட முடியுமா என்ன? ஒரு போதும் இல்லை. புலிகள் நடாத் தும் யுத்தம் அரசின் பாசையில் வெறும் பயங்கரவாத நடவடிக்கை என்றுல்,அரசு எதற்காக புலிக ளைப்பற்றி அக்கறைப்பட வேண் டும் ? தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க புலிகளின் யுத்தம் எவ்வகையில் தடையாக உள்ளது..? ' முடக் கழுதைக்கு சறுக்கியது சாக்கு' என்பது போல இலங்கை அரசு தான் இழுப்புக் கொண்டுள்ள பேரினவாத அத்தி வாரத்துக்கு ஆபத்து வராத வித்த் தில் சாக்குப் போக்குசொல்லிக் காலத்தைக் கடத்துகிறது.

உண்மையில் நடப்பது இதுதான்:

அரசு புலிகளுடன் யுத்தம் என்ற பெயரில் தமிழ் மக்களுக்கு எதிராக யுத்தத்தை நடாத்தி வருகிறது. புலிகள் இதை எதிர்த்து யுத்தம் புரி கிறர்கள். புலிகளுக்கு தமிழ் மக்க ளின் விடுதலை நோக்கமாக இருக் கிறது. அதற்காகவே அவர்கள் போராடுகிறர்கள் என்பதெல்லாம், அவர்களது போராட்ட வரலாறு போராட்ட முறை, அவர்களது ஜன நாயகம் மீதான கண்ணோட்டம் என்பவற்றை அடிப்படையாக வைத்துப் பார்க்கும் போது உண்மை போல தெரியவில்லை. அல்லது, வேறுவார்த்தைகளில் சொன்னால், அவர்களது இன் றைய போராட்டம் தமிழ்மக்க ளுக்கு விடுதலையைப் பெற்றுத்த ரப்போவதில்லை. ஆயினும், தமிழ் மக்களின் இன அடையாளத்தை இல்லாதொழிக்கும், யுத்தத்திற்கும், அதற்கெதிரான யுத்தத்திற்கும் (அது எவ்வளவு படுமோசமான வரம்பு மீறல்களை மனித உரிமை மீறல்களை கொண்டிருந்த போதும்) இடையில் சமத்துவம் இருப்பதாக கருத முடியாது. புலி கள் யுத்தத்தை நிறுத்த வேண்டும், ஆயுதத்தை கீழே போட வேண்டும் என்று கோருவது, யுத்தத்தில் தற் காப்பு யுத்தம் நடாத்துபவனை நிரா யுதபாணியாக்குவதற்குச் சமனா கும்.

இவ்விடத்தில், புலிகளின் முஸ் லிம் மக்கள் மீதான தாக்குதல், தமிழ் மக்களின் அரசியல் ஜனநா யக உரிமைகளுக்கு அச்சுறுத்தல் தருதல் என்பன எதிர்க்கபடவேண் டும் என்பதை மறுக்க முடியாது. ஆனால், அதைச் செய்ய அரசுக்கு அங்கீகாரம் வழங்குவது தான் ஆபத்தானது. அரசு முஸ்லிம் மக்க ளுக்கோ, தமிழ் மக்களின் ஜனநாய கத்திற்கோ ஒரு போதும் பாதுகாவ லனாக இருக்கப் போவதில்லை. மாறாக, தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரினதும் முற்று முழுதான அரசியல் உரிமைகளை விழுங்கி ஏப்பம் விடவே அது முயல்கிறது.

ஆக, முற்போக்காளர்கள் ஒன்றை தெளிவு படுத்தி கொள்ள வேண்டும். யுத்தத்தை நிறுத்து என்று கோரும் போது, அதை நிறுத்த வேண்டியது அரசுதான் என் பதைப் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரி மையை அங்கீகரிக்காத வரை யுத்த நிலைமை நீடிப்பதையோ, புலிக ளின் இருப்பையோ யாராலும் அசைத்து விட முடியாது என்று புரிந்து கொள்ள வேண்டும்; தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் வழங்கப்படாத வரை, புலிகளிடம் யுத்தத்தை நிறுத்துமாறு கோருவ தும், த.வி.கூ மற்றும் இ ஜனநாயக வழிக்கு வந்துள்ள அரசியல் கட்சிக ளின் வாயைக் கட்டிப் போடுவதும் ஒன்றுதான் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

புலிகளுக்கு பாடம் கற்பிக்க வேண்டும் என்று யாராவது கருதி னால், அந்தப் பொறுப்பை தமிழ் மக்களிடம் கொடுங்கள். அரசுக்கு அதைச் செய்ய எந்தத் தார்மீக உரி மையும் கிடையாது.

## கருத்தடை...

மனோநிலை போன்றவற்றை நிபந் தனையாக முன் வைத்து அங்கீகரிக் கிறது.

இறுதியாக சமரின் கருத்து தொடர் பாக ஒரு கேள்வி. வர்க்கப் போராட்டமும் புரட்சியும் மக்க ளின் விடுதைக்கு அவசியம் எனக் கருதும் சமர், உயிர்க் கொலையை நிச்சயம் நிபந்தனை அற்று நிராக ரிக்க மாட்டாது என நினைக்கி றேன். புரட்சிகர வன்முறை பற்றிப் பேசிய மார்க்சியவாதிகள் யாரும் கொலையாளிகளோ,கொலை செய்யும் நோக்கம் படைத்தவர் களோ அல்லர். ஆனால் வர்க்க போராட்டத்தில் கொலை தவிர்க்க முடியாத அம்சமாக வந்து சேர்கி றது. வெறுமனே கொலை என்று பேசுவ.தனால் மயில்பீலிகையு டன் நடமாடும் சமணர்களை தான் நாம் எமது வழிகாட்டிகளாக ஏற்க வேண்டும்.

கருச்சிதைவை கொலை என்று கூறும் சமர், வர்க்கப் போராட்டம், புரட்சி எல்லாம் முடிந்து பொருளா தாரக் காரணிகள் சுமூகமாக அமை யப்போகிற சோசலிச சமுதாயத் தில் இத்தகைய பிரச்சினைகள் வரா தென்று கருதுகிறதா? அவ்வாறா யின் அதுவரை இந்நிலைமைக்கு என்ன தீர்வைச் சொல்கிறது சமர்.

கருச்சிதைவை கொலை என்றால், கருத்தடையையும் கூட அவ்வாறே கருத வேண்டும். தக்கண பிழைக் கும் என்ற டார்வினின் கோட்பாட் டுக்கு அமைய உயிரினம் வாழ்ந் தால் இயற் கை உயிரினச் சம நிலை பேணப்படும். ஆனால் மனி தன், இயற்கையை வெல்லப் பழகி விட்ட பின், மனித வாழ்வுக்கும் அதன் நலனுக்கும் உதவாத பழைய கோட்பாடுகளை தூக்கிப் பிடிப்பது எவ்வகையில் இயங்கியலாகும்?.

## பேச்சு மூச்சு

**“நீ** சொல்லும் எந்த வார்த்தையுடனும் எனக்கு உடன் பாடில்லை.ஆனால் அந்த வார்த்தையைச் சொல்ல உனக்கி ருக்கும் சுதந்திரத்தை எனது உயிரைக் கொடுத்தாவது நான் காப்பாற்றுவேன் '' - வோல்டர்.

உயிரெடுத்தாவது உன்கருத்துழிப்பேன் என்கிற சபதம்போலும் இங்கு. பத்திரிகையுலகின் அண்மைக்காலச் சம்பவங்கள் இந்த முடிவுக்குத் தான் இட்டுச் செல்கின்றன.

நுவரெலியாவில் 'யுக்திய','சரிநிகர்' பத்திரிகையாளர்கள் தாக்கப் பட்டு அவர்களது உபகரணங்கள் பறிக்கப்பட்டமை.

'அத்த' பத்திரிகையின் கேலிச்சித்திரக்காரான யூனுஸ் கத்திக்குத்துக்கு ஆளானமை 'ஏசியா வீக்' கைச் சேர்ந்த ஜோன் ஹொல்மி விசாரணைக் குட்படுத்தப்பட்டமை. கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக ஜன நாயக ஐக்கிய முன்னணியினரின் கையெழுத்து வேட்டையைச் செய் திப்படுத்திக் கொண்டிருந்த உள்நாட்டு, வெளிநாட்டு பத்திரிகையாளர் கள் அவர்களது வீடியோ கமெராவும் மற்றும் உபகரணங்களும் நொருக்கப்பட்டு தாக்கப்பட்டமை, 'யுக்திய', 'அத்த', போன்ற பத்திரி கைகள் மீதான வழக்குகள் என இந்தப் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது முடிவேயில்லாமல்.

*** *** ***

யூனுஸ் கத்திக் குத்துக்குள்ளானது ஒகஸ்ட் 18ம் திகதி மாலை. இதற்கு முதல் நாள் இரவும் பத்துப் பதினைந்து காடையர்கள் யூனுஸின் வீட்டிற் குள் நுழைந்து அவரது தலையில் கைத்துப்பாக்கியை வைத்துப் பிடித்த படி ''நீ எங்களுடைய தலைவரை தாக்கி வருகிறாய் இப்படி தொடர்ந்து செய்தால் உன்னைக் கொன்று விடுவோம்'' என்று மிரட்டியுள்ளனர்.

இது தொடர்பாக யூனுஸ் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார். இதன் பிறகு தான் பஜிரோ ஜீப் வண்டியொன்றில் வந்தவர்களால் யூனுஸ் மீதான இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அவ்வாறாயின் எழுகிற ஒரு கேள்வி;
பாதுகாப்பு யாருக்கு?
தாக்கியவர்களுக்கா?. தாக்கப்பட்டவருக்கா?.

*** *** ***

கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக லிலித், காமினி, பிரேமச்சந் திர, போன்றோர் ஒகஸ்ட் 7ம் திகதி கையெழுத்து வேட்டை நடாத்திக் கொண்டிருந்த போது, அதனைச் செய்திப்படுத்திக் கொண்டிருந்த செய் தியாளர்களே தாக்கப்பட்டவர்கள்.

தாக்குதலின் போது கத்திகள், பொல்லுகள், பிஸ்ரல்கள், பயன்படுத்தப் பட்டன.

சிலரின் மண்டை பிளந்து வீடியோ, கமெராக்களும், ஃபிளாஸ் லைட் டுக்களும் பிடுங்கப்பட்டன; நொருக்கப்பட்டன. வந்த கத்திகளும்; பொல்லுகளும், கைத்துப்பாக்கிகளும் பத்திரிகையாளர்களை உள் நாடு,•வெளிநாடு என்று பேதம் பார்க்கவில்லை.

எல்லாம் முடிந்த பிற்பாடு பிரதமர் டிங்கிரி பண்டா விஜேதுங்க அறிக்கை விடுத்திருந்தார், ''சினமுற்ற பிரயாணிகளே பத்திரிகையா ளர்களைத் தாக்கியதாக'' சரி, பேனாவுக்குள்ளால் வந்து தொலைக்கிற இன்னொரு கேள்வி; பிரயாணிகள் எல்லாம் எப்போது தொடக்கம் கத்தியும், பொல்லும், கைத்துப்பாக்கியும் சுமந்து திரிகிற காடையர் ஆனார்?

*** *** ***

புலியையும் ஜனாதிபதியையும் கொண்ட கேலிச்சித்திரம் ஒன்றை வைத்திருந்தது தொடர்பாக ''ஏசியா வீக்'' ஐச் சேர்ந்த ஜோன் ஹொல்மி விசாரணைக்குள்ளானார். இது தொடர்பாக பத்திரிகையா ளர் சந்திப்பின் போது ''ஜோன் ஹொல்மி எதற்காக கைது செய்யப்பட் டார்? என்ன கூறப்பட்டிருந்தது? அது எங்கு கைப்பற்றப்பட்டது? எங்கு வைத்து விசாரிக்கப்பட்டார்?'' என்றெல்லாம் கேள்வியெழுப்பி னர். பிரட்மன் இவை தொடர்பாக தான் விசாரித்து விட்டுப் பதிலளிப்ப தாக கூறினார். இறுதியாக ''யாராவது கைது செய்யப்பட்டால் உடன் உங்களுக்கு அறிவிக்கப்படுமென்று எமக்கு ஒரு உறுதிமொழி தந்தீர் கள். ஆனால் ஹொல்மியைக் கைது செய்தது தொடர்பாக சி.ஐ.டி. யினர் உங்களுக்கு அறிவிக்கவில்லையே. ஆக, சி.ஐ.டியினர் உங்க ளுக்கு அறிவிப்பார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமுமில்லை அல்ல வா'' எனக் கேள்வியெழுப்பினர்.

அதற்கு ''அந்த நடைமுறையைப் பின்பற்றுமாறு அவர்களுக்கு ஞாப கப்படுத்துகிறேன்'' எனப்பதிலளித்தார் பிரட்மன்.

ஆக யாராவது பத்திரிகையாளரைக் கைது செய்தவுடன் சி.ஐ.டி. யின ருக்கு ஞாபக மறதி வந்து விட்டால்?......

இவ்விடத்தில் எல்லோரும் மறந்து போய் விட்ட சரிநிகரின் ஆரம்ப கால ஆர்வலரும், மனிதஉரிமைவாதியுமான குகமூர்த்தியின் ஞாபகம் வருகிறது.

சந்தர்

நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

சரிநிகர்

# கொப்பேகடுவ படும்பாடு

ரெலிபோன் அலறியது

எடுத்துக் காதில் வைத்ததும் மறுமுனையிலிருந்து ஒரு குரல்.

''கொப்பேகடுவவின் மரணம் குறித்து சில புதிய தகவல்கள். சரியாக இரண்டு மணிக்கு 'ஹோட்டல் ஒபரோய்', இன் காஞ்சனா மண்டபத்திற்கு வரவும்''.

நேரத்தைப் பார்த்தேன். ஒன்று முப்பதைத் தாண்டியிருந்தது.

ஹோட்டல் ஒபரோயின் நுழைவாயில் அடையாளம் சரிபார்த்து, தோள் பையுள் குண்டு தேடி உள்ளே விட்டான், வாசலில் நின்றவன். வழியில் காஞ்சனா மண்டபம் விசாரித்து எங்கெல்லாமோ புகுந்து ஏறி இறங்கி மண்டபத்தை வந்தடைந்தாயிற்று.

உள்நாட்டு, வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களால் காஞ்சனா மண்டபம் நிரம்பியிருந்தது. பத்துப் பதினைந்து நிமிடங்களில் முன்னாள் அமைச்சர்களான காமினி, லலித், ஸ்ரீமாவோ அம்மையார், அநுரா இன்னும் சில எதிர்க்கட்சிப் பிரமுகர்கள் வந்து இருக்கைகளில் அமர்ந்தனர். முகத்தில் மிகுந்த துயருடன் வெள்ளைச் சேலையணிந்த ஒரு சிறிய பெண்மணி இவர்களுக்கப்பால் மண்டபத்தின் மூலையிலிருந்த ஒரு இருக்கையில் உட்கார்ந்தார்.

அவரைப் பார்த்ததும் வடமராட்சி ஒப்பரேசனுக்குள் கணவனையும், மூத்த மகனையும் பறிகொடுத்துவிட்டு, உயிரற்ற உடல்களைக் கூடப் பார்க்க முடியவில்லையே என ஏக்கத்துடன் துயரம் சுமந்து நின்ற ரஞ்சனி அன்ரியின் ஞாபகம் வந்தது.

காமினி திசநாயக்கா அவரை அறிமுகப்படுத்தியதுடன் ஒரு வேண்டுகோளையும் விடுத்தார். இவர் திருமதி.லலி.கொப்பேகடுவ. தயவு செய்து தன்னை புகைப்படம் எதுவும் பிடிக்க வேண்டாம் என்று அவர் கேட்டுக் கொள்கிறார் என்றார்.

ஜெனரல் கொப்பேகடுவவின் மரணம் எவ்வாறு நிகழ்ந்தது என்பது குறித்து திருமதி கொப்பேகடுவவிற்கு சந்தேகம் ஏற்பட்டதால் அவர் அது தொடர்பான புகைப்படங்கள் உட்பட பல விபரங்களையும் பிரிட்டனிலுள்ள குண்டு வெடிப்பு நிபுணருக்கு அனுப்பி வைத்திருக்கிறார். அந்நிபுணரின் ஆய்வின் முடிவுகள் இச்சம்பவம் நிலத்தில் புதைக்கப்பட்ட கண்ணி வெடியால் ஏற்பட்டதல்ல, அதே வாகனத்தில் பொருத்தப்பட்டிருந்த குண்டு ஒன்று வெடித்ததால் ஏற்பட்டதாகவே இருக்க வேண்டும் என்று தெரிவிக்கின்றன எனத் தெரிவித்த காமினி இது தொடர்பாக சர்வதேச விசாரணைக் கமிஷன் ஒன்றை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளும் திருமதி கொப்பேகடுவவின் அறிக்கை ஒன்றையும் வாசித்தார்.

அறிக்கை வாசிப்பின் முடிவில் இக் குண்டு வெடிப்புத் தொடர்பாக பிரிட்டிஷ் வெடிகுண்டு நிபுணரின் விபரிப்பு ஒளிப்பதிவு செய்யப்பட்ட வீடியோவும் காண்பிக்கப்பட்டது.

பத்திரிகையாளர்கள் கேள்விகளை ஆரம்பித்தனர்.
''இக் குண்டு வெடிப்புச் சம்பவத்திற்குப் புலிகள் பொறுப்பல்ல என்கிறீர்களே! அப்படியானால் யார் பொறுப்பு? கொழும்பிலுள்ள


கொப்பேகடுவ

தமிழ் குழுவான ஈ.பி.டி.பி கூட இச் சம்பவத்தைக் தொடர்ந்து கூட்டிய பத்திரிகையாளர் மாநாட்டில் புலிகளது கண்ணி வெடி தான் இது என்று கூறியுள்ளனரே?.'' என்ற பத்திரிகையாளரொருவரின் கேள்விக்கு '' இது கண்ணிவெடியால் ஏற்பட்ட மரணம் அல்ல என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். இம்மரணம் தொடர்பாக திருமதி கொப்பகேடுவவுக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது. அவர் இது தொடர்பாக விசாரிக்க சர்வதேச விசாரணைக் கமிஷன் ஒன்றை அமைக்கும்படி கோருகிறார்'' என்றார் காமினி.
''சரி, யார் இதனைச் செய்திருக்க கூடும்''?

பத்திரிகையாளரின் இக்கேள்விக்கு மாநாட்டின் இறுதிவரை பதில் கிடைக்கவேயில்லை.

மறுநாள் லேக்கவுஸ் பத்திரிகைகளைப் பார்த்த போது அதிர்ச்சியாகவிருந்தது. கொப்பேகடுவவின் நிலக்கண்ணி வெடிக்கு காரணமான வீரர்களுக்கு புலிகளின் தலைவர் பிரபாகரன் பரிசு கொடுக்கும் படங்களை பிரசுரித்து புலிகளே இச்சம்பவத்திற்கு பொறுப்பு எனப் பிரச்சாரம் செய்திருந்தன.

சரி, இயந்திரக் கோளாறினால் இயக்கச்சியில் விழுந்ததாக அரசு சொன்ன வை 8 ஐயும், அம்பாறையில் விழுந்த ஹெலியையும் கூட தாங்களே சுட்டு வீழ்த்தியதாக புலிகள் உரிமை கோரியுள்ளன. அவற்றையும் புலிகள் செய்ததாக ஏன் அரசு ஒத்துக் கொள்ளவில்லை. மறுக்கிறது.

திருமலை ஆயுதக் கிடங்கு வெடிப்பு தற்செயலானது என்று அரசு சொன்ன போதும், தமது வேலையே என்று புலிகள் சொல்கின்றனரே. அதனை மட்டும் ஏன் அரசு மறுக்கிறது? அதுவும் புலிகள் தான் என்று ஏன் சொல்லவில்லை.


இரண்டாவது கேள்வி கொப்பேகடுவவை சிங்கள இனத்தின் பாரம்பரியத்தையும், தேசியத்தையும் பேணிக்காத்து வந்த வீரனாக காட்ட முனைவதும், அத்தகைய வீரனை புலிகளால் ஒரு போதும் கொல்ல முடியாது; சதியினாலேயே அவர் கொல்லப்பட்டிருக்க வேண்டும் என்றும், இத்தகைய சதிகளே யுத்தத்தில் இராணுவத்தை பின்னடையச் செய்து வருகிறது என்றும் அரசிற்கெதிராக ஒரு துரும்பாக இதனைத் திருப்பி விட எதிர்க்கட்சிகள் முயல்கின்றனவோ என்பது. ஏனெனில் பின்னர் திருமதி கொப்பேகடுவ விடுத்த அறிக்கையொன்றில் சில எதிர்க்கட்சிப் பிரமுகர்களைச் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகக் கூறியிருப்பதால்தான் அங்கே போனதாகவும், போன பின்னர் தான் அது ஒரு பத்திரிகையாளர் மாநாடு என்று தெரிந்தது என்றும், தன்து தனது அறிக்கையை வாசிக்கும்படி தன்னிடம் கேட்கப்பட்ட போது தான் அதனை விரும்பாமல் வெளியேறி விட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

ஆக, கொப்பேகடுவவின் மரணத்திற்குப் புலிகள் தான் காரணம் என்று நிரூபிப்பதில் அரசுக்கு ஏதோ இலாபமும், புலிகள் அதற்குக் காரணமேயல்ல சதிதான் காரணம் என்று நிரூபிப்பதில் எதிர்க்கட்சிகளுக்கு ஏதோ இலாபமும் கிடைக்கவிருக்கின்றன போல் தெரிகிறது.

புலிகளோ ''வழமை போல'' உரிமை கோரியிருக்கிறார்கள். இந்த மயிர் பிளக்கும் விவாதத்தில் யார் வென்றாலென்ன இலாபம் புலிகளுக்குத் தான் போய்ச் சேரப் போகிறது.

## மீசைக்கும் ஜனநாயகத்திற்கும் என்ன உறவு?


கொப்பேகடுவவின் கண்ணிவெடியுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு பிரபாகரன் பரிசு வழங்கும் படம் உலகத்தமிழரிலிருந்து


பத்திரிகையாளர் மாநாட்டில்


ஜே.ஆர். உவைற்

பிரிட்டிஷ் இராணுவ முன்னணி சிரேஷ்ட வெடிகுண்டு நிபுணர்களில் ஒருவர். போக்லண்ட் தீவுகளில் குண்டுகளை அகற்றும் நிபுணராகவும், ஈராக் வைத்த குண்டுளை யுத்தப் பிரதேசத்திலிருந்து அகற்றுவதிலும் பணி புரிந்திருக்கிறார். வட அயர்லாந்திலும், இங்கிலாந்திலும் நடைபெறும் குண்டு வெடிப்புகள் சம்பந்தமான அறிவுடையவர்.

தற்போது குவைத்திலுள்ள பிரிட்டிஷ் அரச விநியோக பிரிவின் ஆலோசகராக உள்ளார்.

அவர் தெரிவித்த விபரங்களுள் முக்கியமானது; படங்கள் 3, 8 இன்படி பின்புற வலது பக்க சில்லு பெரியளவு பாதிக்கப்பட்டுள்ளது, தெரிகிறது. குண்டு கீழிருந்து - நிலத்திலிருந்து - வெடித்திருப்பின் சில்லு மேற்புறமாகவும் வெளிப்புறமாகவும் தள்ளப்பட்டிருக்க வேண்டும். படம் 8, சில்லு 90 பாகை வலப்புறமாக திரும்பியிருப்பதையும், சிறிதே மேல் நோக்கி இருப்பதனையும் காட்டுகிறது. இது சில்லுக்கு சமவளவான உயரத்திலிருந்தே இக்குண்டு வெடித்ததைக் காட்டுகிறது. அவ்வளவு உயரத்தில் - ஏறத்தாழ நிலத்திலிருந்து அரையடி உயரத்தில் குண்டு இருந்திருப்பின் அது கண்பார்வைக்கு தெரிந்திருக்கும். வாகனத்தை ஓட்டியவர் கண்டிருக்க வேண்டும்.

மேலும் இச்சம்பவம் நிலக்கண்ணிவெடியால் ஏற்பட்டிருப்பின் அது தாங்கி எதிர்ப்பு கண்ணி வெடியாக இருக்க வேண்டும். கூடியளவு - மூன்று தொடக்கம் நான்கு கிலோ - வெடிமருந்தை கொண்டிருக்க வேண்டும். அது வயர் மூலம் இயக்கப்பட்டிருக்கலாம் அல்லது Temote control மூலம் இயக்கப்பட்டதாயிருத்தல் வேண்டும். ஆனால் அவற்றிற்கான தடயங்கள் எதுவும் தென்படவில்லை என்பது அவரது மற்றொருகூற்று.

சரிநிகர் மாத இதழ் இல. 06 அலோ சாலை, கொழும்பு 03. இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் (MIRJE)சார்பில்
வெளியிடுபவர்: ச. பாலகிருஷ்ணன். அச்சுப்பதிவு : இரத்மலானை நவமக அச்சகம். 1992. 12. 10